சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

31. 'சீதை பொய் சொன்னாளா?'

மலை போல நின்ற வானரத்தைக் கண்ட அரக்கியர் அனுமனைக் குறித்துச் சீதையிடம் கேட்டதும் சீதை தனக்கொன்றும் தெரியாதென்றும், அனுமனை ஓர் அரக்கனென்றே தான் நினைப்பதாகவும் பதில் சொன்னதாக வால்மீகம் கூறுவதாய்த் தெரிந்து கொண்டோம். இதற்குத் தம் சொந்தக் குறிப்பு ஒன்றும் எழுதிச் சேர்த்திருக்கிறார் பேரறிஞரான திரு. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார்:

வாதமும் எதிர் வாதமும்

'விவாக காலத்திலும்... பிராணனுக்கு ஆபத்து நேரிடும் பொழுதும் சிநேகிதனுக்காகவும் தன் தனம் முழுதும் நஷ்டமாகும் பொழுதும் பொய் சொல்லுதல் பாதகமாகாதென்றபடி, சீதை தன் பிராணனுக்கும் சிநேகிதனுக்கும் ஆபத்து நேராதபடி இவ்விதமாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டிருக்கலாம்.'

இதிலிருந்து, சீதாதேவி பொய் சொன்னதாகவே திரு ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் கருதியிருப்பது தெளிவு. இப்பெரியாரின் சமாதானம், 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலி கட்டு' என்று சாதாரணமாக நம்மவர் சொல்லிக் கொள்வதை நினைப்பூட்டுகிறது. 'காதலிலும், போராட்டத்திலும் எல்லாம் நேர்மை தான்!' என்று ஆங்கிலத்தில் சாதாரணமாகச் சொல்லிக் கொள்வதையும் நினைப்பூட்டுகிறது. (தேர்தல் போராட்டத்திலும் என்பதையும் இன்று சேர்க்கலாம்.)

ஆனால் ஸ்ரீமத் ராமாயண காவிய நாயகியின் குணசித்திரத்தை இத்தகைய சமாதானம் சொல்லிப் பாதுகாக்க இயலுமா? 'சீதை மனமார இவ்வாறு பொய் சொன்னது' என்றே செந்தமிழ்ப் பேரறிஞரான ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும் ஒப்புக் கொள்கிறார்.

இந்த உரையாசிரியரும் சமாதானம் சொல்லுகிறார். 'உயிர் போகும் நிலை நேரிடுகையில் பொய் சொல்லலாம்' என்று 'தர்ம' சாஸ்திரம் காட்டுகிறார். 'தர்ம சாஸ்திரமும் கூறுவதனால் ஆகுமென்பர்' என்று சற்று ஜாக்கிரதையாகவே எழுதுகிறார். இவர் கூற்றும், ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்காரின் அபிப்பிராயமும், பழைய உரையாசிரியரான கோவிந்தராஜரின் கருத்தைத் தழுவியன.

ஸ்ரீ கோபாலகிருஷ்ணமாசாரியார், தமிழின் 'தரும சாஸ்திர சிகர'மாகிய திருக்குறளையும் சான்றாகக் காட்டுகிறார்.

பொய்ம்மையும் வாய்மை
இடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

இந்த ரீதியில் சமாதானம் சொல்லிப் பார்த்தாலும், அரிச்சந்திரன் கதை நடையாடும் நாட்டிலே திருப்தி ஏற் படுவது கஷ்டம் தானே !

'பதி இழந்தனம் ;
பாலனை இழந்தனம் ;
படைத்த
நிதி இழந்தனம் ;
இனி நமக்(கு) உளதென
நினைக்கும்
கதி இழக்கினும்
கட்டுரை இழக்கிலேம் !

என்று சொல்லும் அரிச்சந்திரனின் கதை எப்படி ?


வேறொரு பொருள்


'உயிரை மட்டுமல்ல, கதியையே இழக்க நேர்ந்தாலும் பொய்யே சொல்ல மாட்டேன்' என்ற வாய்மை நிலை எப்படி ? தன் உயிரினும் இனிய மகனையும் சத்தியத்திற்காக இழக்கத் துணிந்தவ னல்லவா ?

எனவே சிலர், 'சீதை பொய்யே சொல்லவில்லை' என்று வால்மீகத்தின் அப்பகுதிக்கு வேறு பொருள் உரைக்க முயல்கிறார்கள். இந்த விவகாரங்கள் — இந்த வாதப் பிரதிவாதங்கள்—அறிவா ராய்ச்சிகளோடு கோபதாப உணர்ச்சி களையும் பண்டிதர்களிடையே தூண்டி விட்டிருக்கின்றன.

சீதாபிராட்டி பொய் சொல்லவில்லை யென்ற கருத்துடன் ஒருவர் வால் மீகத்தில் குறித்த பகுதிக்குச் செய்திருக் கும் தமிழுரை இது :

'இஷ்டமானபடி உருவங்களை யெடுக்க வல்ல அரக்கர்களின் காரியத்தில் தலை யிட்டுக் கொள்ளல் எனக்கு ஏன்? எந்த இவன் இதைச் செய்யப் போகிறானே, நீங்களாகவே அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது. வழிப் போக்க னுடைய காலடி வைப்புகளைக் கொடி





என்ற உண்மையை உரைத்திடு' என்றனரல்லவா? அது கேட்ட சீதை 'இவர்கள் உடல் நடுக்கமுற்றிருக்க, என்னைப் பயப்படாதே என்கிறார்கள்; இவர்களைப் பார்க்கும் எனக்கு நகைக்கும்படியிருக்கிறது' என்று எண்ணினாளாம். அந்த நிலையில் சீதை நகைச்சுவையுடன் விடை கூறினாளென்பது இந்த ரஸிகரின் அபிப்பிராயம்.

'புன்னகை பொங்கும் அவள் முகமும் மற்ற அங்கங்களும் புதியதோர் அழகைப் பெற்று விளங்கின' என்ற பீடிகையுடன், வால்மீகத்தின் விவாதப் பகுதிக்குப் பின்வருமாறு உரை கூறியுள்ளார் ஸ்ரீ சுந்தராசாரியார் :

' "நீங்கள் சொல்வது வாஸ்தவம் தான்; இக் குரங்கைப் பார்க்கும் பொழுது எனக்கும் மிகவும் பயமாகத் தான் இருக்கிறது; இவனை நான் அறிவது எப்படி? பாம்பின் கால் பாம்பிற்கே தெரியும் என்பார்கள். ஆகையால் இவனை யாரென்றறிய நீங்களே தகுதியுடையவர்கள். இவன் யார், யாது செய்யப் போகிறான்?—என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். நான் இவனை ஒரு ராக்ஷஸன் என்றே நினைக்கிறேன்" என்றாள்.'

யவன் தப்பாமல் விசாரித்தறிந்தே விடுவான் : சந்தேகம் வேண்டாம். இங்கு வந்திருக்கிற இவனை அரக்கர்களின் இயல்பை ஒத்த, இஷ்டமானபடி உருவங்களெடுக்க, வல்லவனாய் அறிகிறேன். நானும் இவன் எம்மட்டுடையான் என்று இவனை அறிகிலேன். நானும் இவன் விஷயத்தில் கவலை கொண்டவளாய் இருக்கிறேன்.'

சீதையின் இந்த வசனம் அரக்கியர் கேள்விக்குச் சரியான விடையாகுமா? இது வாய்மை தானா? இத்தகைய கேள்விகளை வாசகர்களே போட்டுக் கொண்டு தங்களுக்கு இஷ்டமான முடிவுக்கு வந்து கொள்ளலாம்.

ரஸிகரின் சமாதானம்

இனி, ராமாயண ரஸிகமணி ஸ்ரீ சுந்தராசாரியார் தமது 'சுந்தர காண்ட விமர்சன'த்திலே இது குறித்து என்ன சொல்கிறாரென்று பார்க்கலாம் :

பொழில் அழியும் பேரொலி கேட்டுக் கண் விழித்துக் கொண்ட அரக்கியர் திடீரென்று அனுமனது மலை போன்ற பேருருவம் கண்டதும் திடுக்கிட்டுத் திகிலடைந்தனர். அத்தகைய பயத்திலும் அவர்கள் சீதையை நோக்கி, 'நீ பயப்படாதே, அம்மா! அவன் யார்

அனுமனை முதன் முதல் கண்டதும் சீதை ஐயமுற்றாளல்லவா, 'அரக்கனே இவ்வாறு வேடம் பூண்டு வந்துள்ளான்' என்று? அந்தப் பழைய ஐயத்தை நிகழ் காலத்தில் சீதை அரக்கியருக்கு இச்சமயம் நகைச்சுவையுடன் கூறினாள் என்பது திரு. சுந்தராசாரியாரின் வாதம்.

'சீதை மொழிந்ததிலுள்ள நகைச்சுவையை அறியாமல் ஏதோ பெரிய தர்மப் பிழை ஏற்பட்டு விட்டதாக அதைப் பெரிது படுத்திச் செய்யப்பட்டு வரும் சர்ச்சைகளெல்லாம் மிகை என்றே தோன்றும்' என்று இவர் கூறுவது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

அரக்கியரை ஏமாற்றும் எண்ணம் சீதைக்கு இல்லை யென்றும், அரக்கியரும் எவ்வித ஏமாற்றமும் அடையவில்லை யென்றும் இந்த ரஸிகர் சுட்டிக் காட்டுகிறார். 'தங்கள் வினாக்களுக்கு விடையளிக்கச் சீதைக்கு விருப்பமில்லை

யென்றே கருதி ராவணனிடம் சென்று அவ்வாறே மொழிந்து அனுமன் அசோகவனத்தை அழித்ததை அவ்வரக்கர்கோனுக்கு அறிவித்தனர்' என்று கூறி இந்த விவகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட முயல்கின்றார் இவர்.

இந்த அபிப்பிராயம் சரியென்றால், வால்மீகத்திலே சீதையின் குண சித்திரம் பழுதுருவண்ணம் பாதுகாக்கப் படுகிறது. இது நிற்க. கம்ப ராமாயணத்திலும் சீதாபிராட்டி கூறும் உத்தரம், கோவிந்தராஜர் முதலான பழைய உரையாசிரியர்களின் கருத்தையே அரண் செய்கிறது.

கம்பனும் வால்மீகியும்

'அறிதியோ நங்கை?' என்று அரக்கியர் கேட்டதும், சீதையின் விடை இது:

'உங்களுடைய மாயம் தெரியாமல் தானே எனக்கு இக்கேடு வந்தது? மாயம் தெரியும் வல்லமை பெற்றிருந்தால் இளையவன் வார்த்தையை நம்பிக் கவலையின்றி இருந்திருப்பேனே! ராட்சஸச் செயல்கள் ராட்சஸர்களாலன்றி என் போன்ற தூயவர்களால் ஒரு போதும் தெளிய முடியாது' என்று இங்கே கம்பராமாயணத்தில் வருவது, வால்மீகத்திற்குச் சாதாரணமாக உரையாசிரியர் பொருள் கொள்வதை நினைப்பூட்டுகிறது.

ரஸிக மணி சுந்தராசாரியாரின் அபிப்பிராயம் சரியென்றால், கம்பனும் நகைச்சுவையைப் புரிந்து கொள்ளாமலே இப் பகுதியை மொழி பெயர்த்திருக்கிறான் என்றே கருதத் தோன்றுகிறது.

ஆனால் இது கம்பன் கவிதானா? கவனமாய்ப் படித்துப் பாருங்கள்; வாக்கு ஒரு மாதிரி இருக்கிறதல்லவா? மீண்டும் படித்துப் பாருங்கள்; பாடியும் பாருங்கள்,—முக்கியமாகப் பிற்பகுதியை.

ஆயமான் எய்த
அம்மான் இளையவன்...

—எப்படி இந்தச் சொல் முடிச்சுகள்? இந்தப் பாட்டை விட்டுவிட்டு அடுத்த பாட்டைப் படித்துப் பாருங்கள்:

என்றனர் அரக்கி
மார்கள், வயிறலைத்(து)
இரியல் போகிக்
குன்றமும் உலகும்
வானும் கடல்களும்
குலையப் போனார்;
நின்றசெய் குன்று
கண்டான், நீக்குவல்
இதனை என்னாத்
தன்தடக் கைகள்
நீட்டிப் பற்றினன்
தாதை ஒப்பான்.

[வயிறலைத்து – வயிற்றில் அடித்துக் கொண்டு. இரியல் போகி–நிலைகுலைந்து. செய்குன்று–மலை போலச் செய்யப்பட்டிருந்த விநோதக் குன்று. தாதை ஒப்பான் – தந்தையான வாயுவை ஒத்த அனுமன்.]

'அறிதியோ நங்கை?' என்று அரக்கியர் நடுங்கிக் கொண்டே கேட்கிறார்கள். சீதாபிராட்டி உத்தரம் கூறுவதற்கு முன்பே மலைபோல நின்ற வானர உருவத்தைக் கண்ட பெரும் பயத்தினால் அப்படியே வயிற்றில் அடித்துக் கொண்டு நிலைகுலைந்து மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடிக்கிறார்கள் என்பது கம்பன் கதை.

இப் பாட்டிலே 'என்றனர் அரக்கிமார்கள்' என்பதில் 'என்றனள்...' என்று ஒரு சிறு திருத்தம் செய்து கொண்டு சீதை கூறும் உத்தரமாக ஒரு முழுப் பாட்டைச் செருகியிருக்கிறது, வால்மீகியோடு கம்பனையும் பொருந்தச் செய்ய வேண்டும் என்ற விருப்பம்.

* * *

அனுமன் அந்தச் செய்குன்றைப் பற்றினான்; பறித்தான்; வீசி விட்டெறிந்தான் இலங்கை மாளிகைகள்மீது.

அது ஒரு பெரிய முரட்டுச் செய் குன்றம். பொன்னால் செய்து இரத்தினங்கள் பதித்தது. வெண் முத்துக்களும் பதித்துள்ளது. ஒரு பக்கம் பார்த்தால் புதிய பால்நிலாப் பொழிவது போல் ஒளி வீசியது. வேறொரு கோணமாகப் பார்த்தால் சூரியனுக்கும் பூண்டு கொள்ளத்தக்க ஓர் ஆபரணம் போல ஒளிர்வது. அனுமனுக்கோ இதன் அழகைக் கண்டு வியக்க அவகாசம் இல்லை.

கூரிய நகங்களுள்ள தன் பெரிய கைகளால் ஒரு செடியை வேரோடு பறிப்பது போல் பற்றிப் பறித்தெடுக்கிறான். அள்ளி எடுத்ததுதான் தாமதம், பொற்குன்று பறக்கிறது இலங்காபுரியின் விண்ணுற உயர்ந்த மாடமாளிகைகளை நோக்கி.

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

32. எப்படி நம்புவான்?

அமெரிக்க நகரம் ஒன்றின் விண்ணுற நிமிர்ந்த மாடங்கள் மீது ஆகாயக் கப்பல் ஒன்று பறந்து செல்ல, அதிலிருந்த ஒரு வெடிக்குண்டு – விஞ்ஞானி என்ன நினைத்தார், தெரியுமா? 'கீழே தோன்றிய மாடங்கள் — ஆஹா! — வெடிக்குண்டு போடுவதற்கு—அடடா! — எவ்வளவு அருமையான இலக்காகும்!'

கேடு பிழைக்குமா?

அத்தகைய 'விஞ்ஞான – விநாச குதூகல'த்துடன் அநுமனும் இலங்கையின் விண்ணுற விரிந்த மாடங்களை விரும்பி நோக்கினான், தன் தடக்கைகளால் அந்த முரட்டுச் செய்குன்றத்தைப் பெயர்த்தெடுத்த போது.

'நோக்கினான், நொறுக்கினான்!' என்று சொல்லும்படி,

விட்டனன் இலங்கை
தன்மேல்; விண்ணுற
விரிந்த மாடம்
பட்டன, பொடிக —
ளான படுத்தன;
பாங்கு நின்ற
சுட்டன பொறிகள்
விழ; துளங்கினர்
அரக்கர் தாமும்
கெட்டனர் விரர்
அம்மா! பிழைப்பரோ
கேடு சூழ்ந்தார்?

[விட்டனன் இலங்கை தன்மேல்—அந்தச் செய்குன்றை இலங்கை மீது விட்டெறிந்தான். விண்ணுற விரிந்த மாடம் – வானளாவ விரிந்து நின்ற மாட மாளிகைகள். பட்டன—மோதப்பட்டனவாய். பொடிகளான படுத்தன—பிளவுபட்டுப் பொடிகளாய் விட்டன. பாங்கு நின்ற – பக்கங்களில் இருந்த பொருள்களை யெல்லாம். சுட்டன பொறிகள் வீழ – (செய்குன்று மாடங்களோடு மோதும்போது) நெருப்புப் பொறிகள் சிந்திவிழச் சுட்டெரித்தன. துளங்கினர் – அஞ்சி நடுங்கினவராய். அரக்கர் தாமும் கெட்டனர் வீரர் – ராட்சஸ வீரர்களும் அப்போது வீரம் கெட்டு விழித்தார்கள். அம்மா – ஆச்சரியம். பிழைப்பரோ கேடு சூழ்ந்தார் – பிறருக்குக் கேடு செய்பவர்கள் அத் தீவினைப் பயனை அனுபவியாது தப்புவார்களோ?]

'தன் வினை தன்னைச் சுடும்' என்ற காரண காரிய விதிக்குச் சான்றாகின்றனவாம் சுட்ட பொறிகள். எத்தனை பேருக்கு வீடு வாசல் இல்லாமல் செய்தவர்கள் இந்த அரக்கர்கள்! வீர சம்பத்தை நல்வழிப் படுத்தாமல் கேடு இழைக்க உபயோகித்துக் கொண்டவர்களல்லவா?

அரக்கியர் போய்ச் சொன்னார்களா?

இனி, அனுமனது இந்த 'நாச கைங்கரியம்' ராவணன் செவியில் விழ வேண்டுமல்லவா? அனுமனது பர்வத சொரூபம் கண்டு அஞ்சி ஓடிய அரக்கி

யர் ராவணனிடம் போய்ச் செய்தி சொல்லி யிருப்பார்கள் என்றுதான் நாம் ஊகிக்கக் கூடும். அப்படித்தான் வால்மீகம் தெரிவிக்கிறது.

விகார முகமுள்ள அரக்கியர் ராவணனிடம் போய், பயங்கர ரூபம் கொண்டிருந்த வானரத்தை வருணிக்கத் தொடங்கினார்கள். 'அரசே! ஒரு குரங்கு அசோக வனத்திற்கு வந்து சீதையுடன் இரகசியமாய்ச் சம்பாஷித்தது; இப்போதும் அங்கேயே இருக்கிறது. அளவில்லாத ஆற்றல் உள்ளது. நாங்கள் பலவிதமாய்க் கேட்டும் சீதை அந்தக் குரங்கைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை' என்றார்கள்.

'இந்திர தூதனோ? குபேர தூதனோ? சீதையைத் தேட வந்த ராம தூதன் தானோ?' என்று கூடத் தங்கள் ஊகத்தை எஜமானருக்குத் தெரிவித்தார்கள்.

அந்தக் குரங்கினால் அந்தப்புரத் தோட்டம் இல்லையென்று துடைக்கப் பட்டதாகக் கூறி, சீதை யிருக்கும் விருட்சம் மாத்திரம் அழகிய தளிர்களோடும் மலர்களோடும் அழியாமல் அப்படியே இருப்பதாகவும் சொன்னார்கள்.

'தாங்கள் உள்ளத்திலே விரும்பி எடுத்து வந்திருக்கும் சீதையுடன் பேசியும் ஒருவன் உயிருடனிருப்பது தகுமா?' என்று ராவணனுக்கே ஒரு கேள்வி போட்டு, அந்த உக்கிர ரூப வானரத்திற்குக் கடுந் தண்டனை விதிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அது கேட்ட ராவணன் பெருங் கோபத்துடன் கிங்கரர் என்று பெயர் பெற்ற ராட்சஸ வீரர்களை அனுமனைத் தண்டிக்குமாறு அனுப்பி வைத்தான். இது வால்மீகி கதை.

கம்பன் கதையிலோ, பெரும் பயத்தினால் நிலை குலைந்து ஓடிய அரக்கியர் ராவணனிடம் போகவே துணியவில்லை. மூக்கு அறுபட்ட செய்தியை வேறு யார் போய்ச் சொன்னாலும் சொன்ன நாக்கும் அறுபட்டுப் போகும் என்று சூர்ப்பணகை சொல்லி யிருக்கிறாளல்லவா?



வேறு யாரே சொல்லத் துணிவர் ?



அத்தகைய தசமுகனிடம்அசோக வனம் அழிந்ததையும், சீதையோடு சுரங்கு இரகசியம் பேசியதையும் சொல்லப் பைத்தியமா இந்த அரக்கிமாருக்கு?

கம்பனுடைய அசோகவனம், ராவணனுடைய வேலைக்காரர்களான சில தேவர்களின் பாதுகாப்பில் இருந்தது. பருவ காலங்களுக்கு உரிய அதிதேவதைகளான பருவத் தேவர்களே அந்தக் காவலதிகாரிகள். இந்த அதிகாரிகளை அசோக வனத்தின்'போலீஸ்' அதிகாரிகள் என்று கருதலாம். 'காவல் மாத் தேவர்' (பெரிய காவல் உத்தியோகஸ்தர்கள்) என்றும் கவி தெரிவிக்கிறன்.

அநுமனுல் அசோகவனம் அழிந்ததும், பழம் நிறைந்த மாமரத்தின்மீது கல்லெறிவதுபோல் செய்குன்றை வீச மாட மாளிகைகள் தகர்ந்ததும், அசோக வனத்தின் தேவ அதிகாரிகளைத் திடுக்கிடச் செய்கின்றன.

எப்படி ஓடுகிறார்கள் இந்த அதிகாரிகள் ராவணனிடம் செய்தி சொல்ல :

நீரிடு துகிலர்
அச்சம் நெருப்பிடு
நெஞ்சர், நெக்குப்

பீரிடும் உருவர்,
தெற்றிப் பிணங்கிடு
தாளர், பேழ்வாய்

ஊரிடு பூசல்
ஆர உளைத்தனர்
ஓடி உற்றார்

பாரிடு பழுவச்
சோலை பாலிக்கும்
பருவத் தேவர்.

[நீரிடு துகிலர் – நீரால் நனைந்த துகிலை உடையவர்கள். துகில் –உயர்ந்த அழகான ஆடை. நெக்கு – பிளந்து. பீரிடும் உருவர் – இரத்தம் பெருக்கிடும் உடம்பை உடையவர்கள். தெற்றி – மோதிக் கொண்டு. பிணங்கிடு – பின்னிக் கொள்ளும். தாளர் – கால்களை

யுடையவர்கள். பேழ் வாய் - பெரிதாகப் பிளந்த வாய். ஊர் இடு பூசல் ஆரவாரிலே பெரிய இரைச்சல் நிறையும்படி. உளைத்தனர் - ஊளையிட்டவர்களாய். உற்றார் – (ராவணனைச்) சமீபித்தார்கள். பார் - பூமி; (இங்கே) லங்கா பூமியில். இடு–வைத்து வளர்த்திருக்கும். பழுவச் சோலை- பெருஞ்சோலை. பாலிக்கும் - பரிபாலிக்கிற; பாதுகாக்கிற. பருவத் தேவர்- ஆறு பருவ காலங்களுக்கும் உரிய தேவர்கள்.]

அலங்கோல பவனி

விலையுயர்ந்த ஆடைகள் அணிந்திருக்கிறார்கள், தங்கள் உயர்ந்த உத்தியோகத்திற்கு இசைந்தவாறு. அந்த அருமையான உடைகள் இப்போது நனைந்து போகின்றன வேர்வை நீரால். அப்படி நெருப்பை நெஞ்சிலே கொட்டுகிறது பயம்.

'நீரிடு துகிலர், அச்சம் நெருப்பிடு நெஞ்சர்' என்று நீரையும் நெருப்பையும் ஒருங்கே முரண்படக் காட்டிப் பெரும் பயம் தோன்ற அவர்கள் ஓடி வருவதைக் காட்டுகிறான் கவிஞன்.

பாவம், எவ்வளவோ ஒதுங்கிப் பதுங்கிப் பார்த்தார்கள். விழுந்த சுள்ளிகளிற் சில உரசி உடம்பைக் கீறி விட்டதால் இரத்தம் பீரிடுகிறது. இப்படி அசோக வன அழிவுக்கு ஒருவாறு சாட்சியையும் உடம்பிலேயே கொண்டு வருகிறார்கள்.

பாவம், நல்ல சமயத்திலே கால்களும் நடை தராமல் ஒத்துழையாமை செய்யப் பார்க்கின்றன. தட்டித் தடுமாறுகிறது முட்டோடு முட்டு – எந்தப் பிராணிபோல் சொல்லவா வேண்டும்?

கால்கள் பின்னிக் கொள்ள, வாய் 'ஆ' வென்று பிளந்திருக்கிறது. பிளந்த வாய் ஊளையிடுகிறது; ஊரெல்லாம் எதிரொலித்து உளறும் ஒரே இரைச்சல்!

இதே பயம் நடை தராத கால்களுக்கு எப்படியோ வேகமும் தந்து விடுகிறது. பருவத் தேவர்கள் ஓடிவந்து ராவணன் காலில் விழுகிறார்கள்:

சக்கரவர்த்தியின் அருகு சென்று, அடி வீழ்ந்து புலம்புகிறார்கள்:

அரிபடு சீற்றத்
தான்தன் அருகுசென்(று)
அடியின் வீழ்ந்தார்;

'கரிபடு திசையின்
நீண்ட காவலா!
காவல் ஆற்றேம்;

கிரிபடு குவவுத்
திண்தோள்– குரங்(கு) இடை
கிழித்து வீச,

எரிபடு துகிலின்,
நொய்தின் இற்றது
கடிகா!' என்றார்.

[அரிபடு – அரிந்து போடும்படியான. கரி – யானை; (இங்கே) திக்கஜம். கிரி – மலை. குவவு – திரண்ட. திண் – வலிய. துகிலின் – துகில் போல. நொய்தின் – விரைவில். கடி - காவல். கா – சோலை.]

'இப்போதே ராஜிநாமா கொடுக்கத் தயார்' என்று அந்தக் கடிதத்தைச் சொக்காய்ப் பைக்குள் வைத்திருப்பது போலப் பேசுகிறார்கள். காரணம் என்ன?

சுல்தான் படையெடுத்து வந்து விட்டான். அந்தக் குதிரைப் படைகளைக் கண்டதும் ஒரு சிற்றரசனின் போர் வீரர்கள் திரண்டு தங்கள் அரசனிடம் ஓடிவந்து, 'எல்லாரும் சேர்ந்து இப்போதே ராஜிநாமா செய்யத் தயார்' என்றார்களாம்.

காரணம் என்ன? 'குதிரை, குதிரை' என்றார்களாம். 'குதிரைக்கா இவ்வளவு பயம்?' என்று அரசன் கேட்டதும், 'மைசூர்க் குதிரை' என்று தெளிவுபடுத்தினார்களாம். 'அந்த மைசூர்க் குதிரை உங்களை ஏன் இப்படிப் பயப்படுத்துகிறது?' என்றதும், 'ஐயோ, இரும்பைக் கடிக்கிற குதிரை மனிதனை விட்டு வைக்குமா?' என்றார்களாம். அதே நாடகம் ராவணேச்வரன் முன்பும் இப்பொழுது!

'குரங்கு தானே?' என்றால் 'மலைக் குரங்கு' என்கிறார்கள். 'அந்தக் குரங்கு உங்களை ஏன் பயப்படுத்துகிறது?' என்றால், 'ஐயோ, அந்த மலை போன்ற பருத்த தோள்கள்!' என்கிறார்கள்.

மலைக் குரங்கு பூஞ்சோலையில் சாடி விட்டதாம். சும்மா இருக்க முடியுமா? 'அங்கும் இங்கும் கிழித்து வீசியது' என்கிறார்கள். 'குரங்கை ஓட்டி விட்டு மறுபடியும் பூஞ்செடி கொடிகளை நட்டு விடுவது தானே?' 'குரங்கு அநாயாசமாய்த்தான் சேட்டை செய்தது. சோலையோ நெருப்பிலே பிடித்த மெல்லிய ஆடையாகி விட்டது!' என்கிறார்கள்.

ராவணன் எப்படி நம்புவான்?

சுந்தர ராமாயணம்

மீ.ரா

33. நோயும் மருந்தும்

சத்தியாக்கிரகப் போராட்டம் தோன்றி அடிகளின் ஆணை வழியிலே அதிதீவிர அரசியல்வாதிகள் அஹிம்ஸா தர்மப் பெருநெறி பிடித்தொழுகிய காலம். அன்னிய ஆடைகளை நெருப் பிலே போட்டுத் தகனம் செய்து விட்டுக் கதராடைகளைத் தேச பக்தர்கள் துணிந்து சுமந்து திரிந்தார்கள். ஆம், அன்று கதர் இன்றைய கதர் போலில்லை; முரட்டுக் கோணித் துணி போலவே யிருந்தது.

'போடு நெருப்பிலே அந்த மெல்லிய கிளாஸ்கோ மல்வேட்டியை; போடு வதற்குள் எரிந்து போகுமே!' என்று ஆரவாரித்தது தேச பக்த குதூகலம். 'உன் கதர்த்துணியைத் தான் நெருப் பிலே போட்டுப் பார்' என்று எதிர்க் கட்சி பேசினால், 'எங்கள் கதர் நெருப் பையும் அணைத்து விடுமே!' என்று பெருமையாகப் பதில் சொல்லி விடு வோம்.

அத்தகைய சூழ்நிலையிலே,

எரிபடு துகிலின்
நொய்தின் இற்றது

என்பதற்கு, 'நெருப்பிலே பட்ட கதர் போல் அல்ல, அன்னிய மல் துணி போல் விரைவில் அழிந்து விட்டது' என்று கூட அரசியல் - பாஷையை உப யோகித்து வியாக்கியானம் செய்வ துண்டு. ஆனால் இங்கே பிரஸ்தாபிக்கும் துகிலும் அந்தப் பழைய காலத்துக் 'கதர்' தான்!

துகில் எரிந்ததுபோல் அசோக வனம் அழிந்த தென்று செய்தி சொன்ன தேவர்கள், ராவணன் துளியும் நம்ப வில்லை என்பதையும் விரைவில் உணர்ந்து கொண்டனர். ஆனால் உண்மை எப்படி? சோலையை அழித் தது மட்டுமா? இலங்கை மாளிகை களில் சிலவற்றையும் குரங்கு தகர்த்து விட்டதல்லவா?

'இலங்கையும் சிதைந்தது!'

எனவே தேவர்கள் அந்த அழிவையும் அழுத்திக் கூற விரும்புகிறார்கள்:

'சொல்லிட எளிய
தன்றால் சோலையைக்
காலிற் கையிற்

புல்லொடு துகளும்
இன்றிப் பொடிபட
நூறிப், பொன்னால்

வில்லிடு வேரம்
தன்னை வேரொடு
வாங்கி வீசச்,

சில்லிடம் ஒழியத்
தெய்வ இலங்கையும்
சிதைந்த(து)!' என்றார்.

[எளியதன்றால்—எளியதல்ல. காலின் கையின் — கால்களாலும் கைகளாலும்.

துகள்—தூள்; தூசி. நூறி—அழித்து. வில் இடு—ஒளி வீசுகின்ற. வேரம்—செய்குன்று; செல்வர்கள் விளையாடிப் பொழுது போக்க அமைத்துக் கொள்ளும் கட்டுமலை. சில் இடம்—மிகச் சிறிய பாகம். தெய்வ இலங்கை—தெய்வத் தன்மையுள்ள லங்கா பட்டணம்.]

சோலையைத் தவிடு பொடியாக்கி விட்ட 'குரங்குச் சேட்டை'யைப் பாதிச் செய்யுளில் வருணித்து விட்டுப் பிறகு, 'எஜமான் விளையாடக் கட்டியிருந்த அந்தக் கட்டு மலையையும் வேரோடு பறித்து வீசி விட்டது ஊர் மீது' என்கிறார்கள். அதனால் 'இலங்கையும் சிதைந்தது' என்று விண்ணப்பஞ் செய்து கொள்கிறார்கள் ஒரே உயர்வு நவிற்சியாக.

தேவர்களே 'தெய்வ இலங்கை' என்று புகழ்கிறார்கள் ராட்சஸ பூமியை. குரங்கு சிதைத்தது என்று கூடச் சொல்லத் துணிவின்றி, அந்தக் குரங்கை வியாஜமாகக் கொண்டு அந்த இலங்கை தானாகவே சிதைந்து போய் விட்டது போலக் கதை பண்ணுகிறார்கள்.

'சோலை மட்டுமா? இலங்கை முழுதும் அழிந்து விட்டது' என்று மிகைபடக் கூறி எப்படியாவது அரக்கர் கோனை நம்பச் செய்துவிட வேண்டும் என்பது தான் எண்ணம். ஆனால் தன் அரண்மனையில் ஒரு சிறு பகுதி கூடப் பழுது பார்க்க வேண்டிய நிலையிலும் இல்லை என்பது தான் ராவணனுக்குத் தெரியுமே!

ஆகவே அது போன்ற சில இடங்கள் தவிர இலங்கை சிதைந்தது என்கிறார்கள்:

> **சில்லிடம் ஒழியத்**
> **தெய்வ இலங்கையும்**
> **சிதைந்த தென்றார்,**

எவ்வளவோ சாமர்த்தியமாய்ப் பேசுவதாகத் தான் நினைப்பு; எனினும் பத்துத் தலை ராவணனை ஏமாற்ற முடியுமா? கூட்டியும் பெருக்கியும் 'அதிகப் பிரசங்கம்' செய்ததால் அவநம்பிக்கை தான் அதிகப்படுகிறது!

'ஒரு மாடு' என்று செய்தி சொல்ல ஆரம்பிக்கிறான் ஒருவன். உடனே, 'அந்தப் பசு இரட்டை வாலுடனும் அஞ்சு காலுடனும் காணப்பட்டது' என்கிறான். 'ஆகாச மைதானத்திலே மேய்ந்து கொண்டிருந்தது; நான் தான் பார்த்து வந்திருக்கிறேன்!' என்றும் சொன்னால், அதைக் கேட்கும் நம்முடைய நிலைமை என்ன? இதே நிலைமையில் தான் ராவணனும் இருக்கிறான்.

தேவர்கள் ஒரு குரங்கைக் குறித்துப் பிரஸ்தாபித்து, அதன் மலை போன்ற தோள்களை வருணித்து, அது அசோக வனத்தில் சாடி அழித்த அந்த அழிவையும் பிரமாதப் படுத்தி, 'இலங்கையும் சிதைந்தது' என்று கூறி முடித்த செய்தி எப்படித்தான் நம்பிக்கைக்கு உரியதாகும்?

பகுத்தறிவும் புராண மரியாதையும்

'தீ, தீ' என்று கத்திக் கொண்டு ஒருவன் ஓடி வருகிறான். அந்தத் தீக்குஞ்சு மலையிலிருந்து வந்து குளத்திலே குதித்து விட்டதாகப் பேசுகிறான். அந்தத் தீ குளத்திலே படர, 'அக்குளத்திலுள்ள மீன்களெல்லாம் கரையிலுள்ள புளிய மரத்தில் ஏறிக் கொண்டன!' என்று சொல்லி முடிக்கிறான். நம்புவோமா?

ராவணனை 'அறிவாளன்' என்று அரக்கிமார் சீதையிடம் சொன்னார்கள்; 'பகுத்தறிவாளன்' என்றே கருதலாம்.

'இலங்கையும் சிதைந்தது' என்று தேவர்கள் சொன்னதும், 'இலங்கை தானாகச் சிதையுமா?' என்று இந்தப் பகுத்தறிவாளன் தனக்குள் தானே ஒரு கேள்வி போட்டுக் கொண்டிருக்க வேண்டும். 'இலங்கை சிதைந்தது உண்மையானால் குரங்கு தானே சிதைத்திருக்க வேண்டும்?' என்று பத்து மூளைகளிலும் தங்கியுள்ள பகுத்தறிவு ஒரு பதில் கேள்வி போட்டிருக்க வேண்டும்.

'என்னுடைய தலைநகரையா குரங்கு சிதைத்தது? என்னுடைய உத்தியான வனத்தைத்தான் யாரால் சிதைக்க முடியும்?' என்று ராவணன் மறுபடியும் பகுத்தறிவைக் கேட்க, அது 'அதெல்லாம் புராணம், தேவ கற்பனை!' என்று பதில் சொல்லி விடுகிறது.

எனவே ராவணன் **வெளிப்படையாகச்** சொல்லுகிறான்—தேவர்களை நோக்கி அல்ல, தனக்குத் தானே தான். என்ன சொல்லுகிறான்? 'சோலையைப் பொடிபடச் செய்தது! இலங்கையையும் சிதைத்து விட்டது! குரங்கு தான்! அந்தக் குரங்கும் ஒன்று தான்!' என்று தேவர்கள் சொன்னதைத்தான் சற்றுத் திருத்தித் திரும்பச் சொல்லுகிறான் அநுவாதமாக.

அவநம்பிக்கையின் உச்சநிலை இது. ராவணனுள்ளமாகிய பகுத்தறிவுப் பாசறையிலிருந்து நெருப்பைக் கக்கும்

கொலைக் கருவிகள் போலக் கிளம்பு கின்றன .வார்த்தையும், சிரிப்பும்,

'ஆடகத் தருவின்
சோலை பொடிபடுத்(து),
அரக்கர் காக்கும்
தேடரும் வேரம்
வாங்கி இலங்கையும்
சிதைத்த தம்மா!
கோடரம் ஒன்றே!
நன்றி(து) இராக்கதர்
கொற்றம்! சொற்றல்
மூடரும் மொழியார்!'
என்ன மன்னனும்
முறுவல் செய்தான்.

[ஆடகத் தரு – பொன் மயமான மரங்கள். தேடரும் – எங்கே தேடினாலும் காணுதற்கு அரிய; மிக அபூர்வமான. வாங்கி - பறித்து. அம்மா - ஆச்சரியம். கோடரம் - குரங்கு; மரப் பொந்திலும் மரக் கிளையிலும் உள்ள





பிராணி. நன்று – சபாஷ். கொற்றம் - வெற்றி. சொற்றல் – சொல்லுதல்; பேச்சு. மொழியார் – சொல்ல மாட்டார்கள். முறுவல் செய்தான் – சிரித்தான்.]

அந்தத் தேவர்களை முட்டாளை விட மோசமான முழுப் பொய்யர் என்று மதிக்கிறது பகுத்தறிவு. அந்தத் தேவர்களைப் போல் குரங்கைக் 'குரங்கு' என்று சொல்லவும் கூசுகிறது தன்மானத் தனி வீரம். 'மரக் கிளைகளில் சஞ்சரிக்கும் பிராணி' என்று பொருள்படத் தக்க 'கோடரம்' என்ற பரிபாஷையால் தானே குறிப்பிடுகிறான்?

பருவத் தேவர்களின் நிலைமை எவ்வளவு பரிகாசத்திற்கு உரியதாகி விட்டது! இந்தப் பரிதாப நிலையிலே தேவர்கள் பின்னும் குரங்கின் மான்மியம் (மாஹாத்மியம்) பாடுகிறார்கள், பிற்காலப் 'புராண மரியாதை' வழியிலே:

'கேளீர் ஐயா ராவணேச்வரரே! கேவலம் அந்தக் குரங்கையா, நாங்களா, புகழ்வது? "அதைச் சுமக்கும் திண்மை இருக்கிறதே இந்த மண்ணுக்கு!" என்று இந்தப் பூ மண்டலத்தை யல்லவா புகழ வேண்டி யிருக்கிறது ஸ்வாமி?' என்றெல்லாம் குரங்கின் திருப்புகழ் பாடத் தொடங்குகிறார்கள்.

இவர்களுடைய வசனத்தையே நம் பாதவன் இந்தக் கவிதா சக்தியைத்

தானு பாராட்டப் போகிறுன்? நம்ப வில்லையென்று தெரிந்ததும் கடைசியில்! ஒரு வார்த்தை சொல்லுகிறுர்கள் :

'குரங்கு என்று நாங்கள் சொல்லாமல் மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியென்று சொல்லியிருக்கலாம். ஆனுல் அது குற்றம், அவமானம்! யாருக்கு? மும்மூர்த்திகளுக்கு அன்று; குரங்குக்குத் தான்! அவமானத்திலும் முடிவில்லாத அவமானம்!

'அப்பேர்ப்பட்ட குரங்கை இப்பேர்ப்பட்ட சக்ரவர்த்தியாகிய தாங்கள் பார்க்க விஜயம் செய்ய வேணும்!' என்று பிரார்த்திக்கிறுர்கள். 'இப்போதே வர வேண்டும்' என்று அவசரப் படுத்துகிறுர்கள் :

தேவர்கள் பின்னும்,
'மன்ன! அதன்உருச்
சுமக்கும் திண்மைப்

பூவல யத்தை
யன்ருே புகழ்வது?
புலவர் போற்றும்

மூவரின் ஒருவன்
என்று புகல்கினும்,
முடிவி லாத

ஏவம்! அக் குரங்கை
ஐய, காணுதி
இன்னே!' என்ருர்.

[மன்ன – மன்னனே. உரு – உடம்பு. திண்மை – வலிமை. பூவலயம் – பூமண்டலம். புகழ்வது – புகழ வேண்டுவது. புலவர் – அறிஞர்கள். மூவரின் – திரிமூர்த்திகளில். புகல்கினும் – சொன்னுலும். ஏவம் – குற்றம்; (இங்கே) அவமானம். ஐய – ஐயனே. காணுதி – காண்பாய். இன்னே – இப்பொழுதே.]

ராவணேச்வரனு குரங்கு-தரிசனத்திற்குப் புறப்படுவது? குரங்குகளும் மனிதர்களும் ராவண ராஜ்யத்திலே 'காணவும் தகாத சாதி' என்ற குறிப்பினை ஆரணிய காண்டத்தில் கண்டிருக்கிருேம். ராவண தரிசனத்திற்குத் தேவாதி தேவர்களும் கை கட்டிக் காத்திருக்கும் போது, அத்தகைய சக்ரவர்த்தியை வானர தரிசனத்திற்கு அழைக்கத் துணிந்த அடிமைத் தேவர்கள் என்ன பாடு படப் போகிறுர்களோ என்று அஞ்சுகிருேம், அதிசயிக்கிருேம்.

ராவணனுடைய அவநம்பிக்கை தான் எவ்விதமாய்த் தீரப் போகிறதோ?

இப்படி யெல்லாம் நாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போதே தீராத அவநம்பிக்கையும் தீர்ந்து போகிறது. தேவர்களும் ராவண கோபத்திலிருந்து தப்பி விடுகிறுர்கள். ஏன், இவர்களைப் பற்றிய நினைவே மனத்திலிருந்து நழுவி விடுகிறது.

அழிவு வேலையைப் பூர்த்தி செய்து விட்ட அனுமன் ஒரு ஜயகோஷம் செய்கிறுன் :

தொண்டைவாய் அரக்கி
மார்கள் சூல்வயி(று)
உடைந்து சோர

அண்டமும் பிளந்து
விண்ட தாம்என,
அனுமன் ஆர்த்தான்.

[தொண்டை வாய்—கொவ்வைக் கனி போல் சிவந்த வாய். சூல் — கர்ப்பம். சோர — சோர்ந்து போக. அண்டம்— உலக உருண்டை. விண்டது—வெடித்தது. ஆர்த்தான் — ஆரவாரம் செய்தான்.]

அந்தோ! எத்தனை அவப்பிரசவங்கள்! ஆனுல் அவநம்பிக்கைக்கு எத்தகைய அரு மருந்து இந்த வீரகர்ஜனை!



"தவருமல் இந்தப் பத்திரிகையிலே என் கதை பிரசுரம் ஆச்சுன்னு நமக்கு ஒரு காப்பி இனமா வந்துண்டே இருக்கும்.........அப்புறம் நாம் வாங்கிறதை நிறுத்தி விடலாம்."

"ஆனு, அப்புறம் ரொம்ப பேர் வாங்கிறதை நிறுத்தி விடுவா...!"

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ

34. சிங்கர நாடகம்

ஒரு பெரிய மாளிகைக்குள்ளிருந்து நாங்கள் - சுமார் பத்துப் பேர் – பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று மாளிகையும் ஜன்னல்களும் கிடு கிடுவென்று குலுங்கிப் போயின. என்ன செய்வதென்று அறியாத நிலையில் நாங்களும் நடுங்கி யிருந்தோம். எங்கள் இருபது செவிகளிலும் பத்துத் தலைகளிலும் ஏதோ வந்து அறைந்தது போலத் தோன்றியது.. பக்கத்திலே இடி விழுந்ததாகப் பிறகு பேசிக் கொண்டார்கள். அந்த மாதிரி வந்து அறைகூவி மோதுகிறது அனுமனுடைய வீரகர்ஜனையாகிய இடி முழக்கம்.

தலை குலுங்கியும் உளம் கலங்கவில்லை

ஜனசஞ்சாரமில்லாத ஒரு மலையில் இடி யிடிக்கும் போது பீதி அதிகப்படுகிறது; அங்குள்ள குகையே குலுங்கிப் போகிறது. அப்படி வந்து, ராவணனுடைய செவிகளிலே வந்து இடிக்கிறதாம் சடசட வென்று ராமதூதனுடைய ஜயகோஷம்.

கடும் பெரும் புயலில் அலைபட்டுப் பொங்கும் கடலின் கர்ஜனை, 'பிரளயம் இது தானோ?' என்று கலங்குமாறு வந்து மோதுகிறது கப்பலில் உள்ளவர்களின் காதுகளிலே! அப்படி வந்து மோதுகின்றனவாம் சப்த அலைகள் ராவணேச்வரனின் தலைகளிலும் செவிகளிலும்.

பத்துத் தலைகளையும் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கும் கிரீட வரிசைகளோடு குலுக்கி விடும் இந்த ஓசை தான், காவல் – தேவர்களின் சொல்வன்மையால் அசையாத அவநம்பிக்கையையும் சிறிது அசைத்து விடுகிறது :

அருவரை முழையில்
முட்டும் அசனியின்
இடிப்பும், ஆழி
வெருவரு முழக்கும்,
ஈசன் வில்லிறும்
ஒலியும் என்ன,
குருமணி மகுட
கோடி முடித்தலை
குலுங்கும் வண்ணம்,
இருபது செவியி –
னூடும் நுழைந்ததவ்
எழுந்த ஓசை.

[அருவரை முழை – ஜனசஞ்சார மில்லாத மலையின் குகை. அசனி - இடி. ஆழி – சமுத்திரம். வெருவரு முழக்கும் – அச்சம் உண்டாகும்படி முழங்குகிற முழக்கமும். ஈசன் - சிவபெருமான். வில் இறும் ஒலி - வில் முறிந்ததனால் தோன்றிய ஓசை. குருமணி—சிறந்த இரத்தினங்கள். மகுடகோடி - கிரீடங்களின் வரிசை.]

இரண்டு பயங்கரமான இயற்கை நிகழ்ச்சிகளோடு, சிவதனுசை ராமன் முறித்த காலத்தில் உண்டான ஓசையை

யும் உபமானமாக்கும் கவித் திறனைப் பாருங்கள். ராம கதையைக் கண் முன் நிகழும் ஓர் இயற்கை நிகழ்ச்சி போல் அல்லவா காட்டி வருகிறான் கவிஞன்?



அசப்பிலே முடித் தலைகள் குலுங்கிய போதிலும் அந்த வீர உள்ளம் குலுங்கிவிடவில்லையாம்; கலங்கிப் போகவுமில்லையாம்:

புல்லிய முறுவல்
தோன்றப் பொருமையும்
சிறிது பொங்க,

எல்லையில் அரக்கர்
தம்மில் இசைந்தகிங்-
கரரை ஏவி,

'வல்லையின் அகலா
வண்ணம் வானையும்
வழியை மாற்றிக்

கொல்லலீர் குரங்கை!
நொய்தின் பற்றுதிர்
கொணர்திர்!' என்றான்.

[புல்லிய முறுவல்–அலட்சியச் சிரிப்பு. எல்லையில்–எல்லையில்லாத. வல்லையின்–விரைவிலே. கொல்லலீர் – கொன்று விடாதவர்களாய். நொய்தின்–லேசாக. பற்றுதிர் – பிடியுங்கள்.]

முன்பு ராவணனோடு போய்த் திக்கு விஜயம் செய்த அனுபவசாலிகளான ராட்சஸப் படையை நோக்கி ராவணன் போடும் உத்தரவைக் கேளுங்கள். 'குரங்கு கூப்பாடும் போடுகிறதா?' என்று 'புல்லிய முறுவல்' செய்தவனுக்கு இப்போது ஒரே கவலைதான்: 'இவ்வளவு சாமர்த்தியமான குரங்கு எப்படியாவது தப்பி ஓடிப்போய் விடுமோ?' எனவே, தப்பி ஓடுவதற்குரிய வழிகளைத் தடுக்க வேண்டும் என்கிறான்.

வேறொரு கவலையும் கூட; லேசாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறானல்லவா? கொஞ்சம் அழுத்திப் பிடித்தால் குரங்கு நசுங்கிப் போய் விடுமாம். அடடா, என்ன கருணை ராவணேச்வரனுக்குத் தான்!

கொல்லலீர் குரங்கை!

என்று கூடத் தெளிவாய்ச் சொல்லுகிறானல்லவா?

உயிரோடு உருப்படியாகப் பார்க்க விரும்புகிறான். தேவர்கள் பிரார்த்தித்தும் பார்க்க இசையாத 'குரங்கு மூஞ்சி'யை இப்போது பார்க்க வேண்டுமென்று தானாகவே தீர்மானிக்கிறான்.

'அநுமான் மாற்றானிடத்தினின்று இலங்கையின் செய்தியை அறிந்து செல்ல வந்த ஒற்றனாதலால், அவ்வாறு வந்த ஒற்றன் மூலமாகத் தன் மாற்றான் செய்தியை உணரக்கருதி, "கொல்லலீர் குரங்கை நொய்திற் பற்றுதிர் கொணர்திர்" என்று கிங்கரருக்கு இராவணன் கட்டளை யிடலாயினன்' என்று ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கூறியுள்ளார். ஆனால் ராவணனுக்கு இப்போதுள்ள நிலையில் 'அநுமான் மாற்றானிடத்தினின்று இலங்கையின் செய்தியை அறிந்து செல்ல வந்த ஒற்றன்' என்பது எப்படித் தெரிந்திருக்க முடியும்? தேவர்கள் தெரிவித்ததெல்லாம் ஏதோ ஒரு முரட்டுக் குரங்கு சோலையை அழித்துச் செய்குன்றையும் பறித்தெறிந்தது என்பதுதானே?

கம்பனும் மில்ட்டனும்

இனி, ராவணேசுவரனுடைய கட்டளை எப்பேர்ப்பட்ட போர். வீரர் காதில் விழுகிறது கேளுங்கள்:

'நானிலம் அதனின்
உண்டு போர்!' என
நவிலின் அச்சொல்

தேனினும் களிப்புச்
செய்யும் சிந்தையர்,
தெரித்தும் என்னின்,

கானினும் பெரியர்;
ஓசை கடலினும்
பெரியர்; சீர்த்தி

வானினும் பெரியர்;
மேனி மலையினும்
பெரியர் மாதோ!

[நானிலம்–பூமி. நவிலின் – சொன்னால். தேன்–(இங்கே) மது; கள். தெரித்தும் என்னின்–தெரிந்து அறிவிப்போம் என்றால். கானினும்–காட்டைக் காட்டிலும். சீர்த்தி – சிறந்த புகழ்.]

என்று கவிஞன் அறிமுகப் படுத்துகிருன் அந்தப் போர் வீரர்களை.

'உலகத்தில் எங்கேயாவது — நாட்டிலோ, காட்டிலோ, மலையிலோ, கடலிலோ — உண்டு போர்' என்று யாராவது சொல்லி விட்டால் போதுமாம்.

செந்தமிழ் நாடெனும்
போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே

என்ற பாரதியாரின் தேச பக்தர்களைப் போல் ஆகி விடுகிருர்கள் இந்த 'யுத்த பக்தர்'களும்! ஆனல் பாரதியாரின் தேன் வேறு, கம்பனின் தேன் வேறு.

ராட்சஸப் போர் வீரர்களுக்கு இரட்டைக் காதல், – பாரதியார் தமக்கு 'மூன்று காதல்' என்று பாடி யிருப்பது போல. கள்ளுக் காதலைக் காட்டிலும் போர்க் காதல் பெரிது அரக்கருக்கு, கள்ளைக் காட்டிலும் கள்வெறி போரிலே தான்!

பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே!


என்று பக்த மணிகள் முழங்குகிருர்களல்லவா? போரிடாத நாளெல்லாம் பிறவா நாள் என்பது அரக்கர் மதம்.

'போர் என நவிலின், அச்சொல் தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர்' என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. 'வைக் கோற்போர்' என்னும் பொருளில் 'உண்டு போர்' என்று ஒரு குடியானவன் சொன்னலும், 'கஞ்சி வரதப்பா!' என்ற கதை தான் இந்தப் போர்ப் பசியருக்கும்.

இத்தகைய போர் வீரர்கள் புறப்படுகிருர்கள் அணியணியாக, பட்டாளம் பட்டாளமாக. ஒரு காடு புடை பெயர்ந்து போவது போலப் போகிருர்கள். அலை கடலே பொங்கிப் போவது போலவும் இருக்கிறது அந்த ஓசையைக் கவனிக்கும்போது.

தனித் தனியாக இந்தக் கிங்கரர்களை நோக்கினல், மலை மலையாகக் காண்கிருர்களாம். கீர்த்தியிலோ இவர்களை 'வானினும் பெரியர்' என்கிருன் கவிஞன்.

இந்தப் பட்டாளப் பரப்பையும் பரபரப்பையும், போகும் போக்கையும், சைகைகளையும், இடிக் குரல்களையும் நிமிர்ந்த தோற்றத்தையும் கூர்ந்து கவனிப்போம் இந்தக் கவிதைக் கண்ணுடி வாயிலாக:



கட்டிய வாளர்,
    இட்ட கவசத்தர்,
    கழலர் ; திக்கைத்
தட்டிய தோளர்,
    மேகம் தடவிய
    கையர், வானை
எட்டிய முடியர்,
    தாளால் இடறிய
    பொருப்பர் ; ஈட்டிக்
கொட்டிய பேரி
    என்ன, மழைஎனக்
    குமுறும் சொல்லார்.

[வாளர் – வாளாயுதத்தை உடையவர்கள். இட்ட – (உடம்பிலே) தரித்த. கழலர் – (காலில் இட்ட) வீரக் கழலை உடையவர்கள். தாளால் – கால்களால். பொருப்பர் – மலைகளை உடையவர்கள். ஈட்டி – ஒருங்கே சேர்த்து. பேரி – பேரிகை. மழை – (இங்கே) மேக கர்ஜனையாகிய இடி. குமுறும் – முழங்குகிற.]

இந்தக் கிங்கர வருணனை ஆங்கில மகா கவி மில்ட்டனின் சாத்தான் - பரிவார வருணனையை நினைப்பூட்டுகிறது. கம்பனுடைய போக்கும் காம்பீர்யமும் மில்ட்டனை நினைப்பூட்டுவது போல், நாடகத் திறன் மேற்குக் கவிச் சக்ரவர்த்தி ஷேக்ஸ்பியரை நினைப்பூட்டுகிறது.

ஆயுத ஆபரண ஜாலங்கள் பயங்கர ஒளி வீசக் கண்கள் கோபாக்கினி வீச இவ்வளவு வேகமாய்ப் போகிறார்களே, — 'ஏன் போகிறோம்?' என்பதுதான் தெரியுமா இவர்களுக்கு? 'எங்கே போகிறோம்?' என்பது கூடப் பெரும் பாலருக்கும் தெரியாது; ராவணனுடைய கட்டளை சிலர் காதில்தான் விழுந்திருக்கக் கூடும்.

'ஏன்?' என்று விசாரிப்பதும், 'என்ன?' என்று விசாரிப்பதும் படைவீரர் கடமையன்று. சொன்னதைச் செய்ய வேண்டும், சாக வேண்டும்–அவ்வளவு தானே போர்வீரர் வேலை, சோற்றுக் கடன்? இந்த நிலையில் கிங்கரர்கள் போய்க் கொண்டிருக்கும் போது 'ஏன்?' என்று ஒரு போர்வீரன் பக்கத்தில் வரும் வேறொரு போர் வீரனைப் பார்த்துக் கேட்டு விடுகிறான்.

ஒரு குட்டி நாடகம்

அப்புறம் என்ன நடக்கிறது? வினவுக்கு விடை கிடைக்கிறதா? அதுதான் இல்லை.

பொன்னின்று கனலும்
    தெய்வப் பூணினர்,
    பொருப்புத் தோளர்,
மின்னின்ற படையும்
    கண்ணும் வெயில்விரிக் –
    கின்ற மெய்யர்,
'என்?' என்றார்க்(கு) 'என்? என்?'
    என்றார், எய்திய(து)
    அறிந்தி லாதார் ;
முன்னின்றார் முதுகு
    தீயப் பின்னின்றார்
    முடுகு கின்றார் !

[பொன் நின்று – பொன் நிறைந்து. கனலும் – விளங்கும். தெய்வப் பூணினர் – 'தெய்வத்தன்மை வாய்ந்தவைகளோ?' என்று பிரமிக்கும்படி வேலைப்பாடு அமைந்த ஆபரணங்களை உடையவர்கள். பொருப்புத் தோளர் – மலை போலப் பருத்து ஓங்கிய தோள்களை உடையவர்கள். மின் – மின்னல். படை– ஆயுதங்கள். மெய்யர் – உடம்பை உடையவர். என் – என்ன. எய்தியது - நிகழ்ந்தது. முடுகுகின்றார் – விரைந்து போகிறார்கள்.]

'என்ன? நாம் ஏன் கொல்ல வேண்டும், கொல்லப்பட வேண்டும்? தெரிந்து கொள்ளலாமே' என்ற ஆலோசனை எப்படியோ உதயமாகி விடுகிறதாம் அந்தக் கிங்கரப் பெருவெள்ளத்தின் ஒரு மூலையில், ஒரு மூளையில். அப்படி ஒரு கேள்வி போடலாம் என்பதே இப்போதுதான் மற்றவர்களுக்கும் தெரிய வருகிறது.

'என்ன!' என்று ஒருவன் கேட்டதும், ஆயிரம் குரல்கள் ஏக காலத்தில் எதிரொலிக்கின்றன 'என்ன, என்ன?' என்று. நடந்தது இன்னதென்று தெரியாது. நின்று ஆலோசிக்கவோ நேரம் இல்லை. யாராவது நின்று ஆலோசிக்கத் துணிந்தால் அவர்கள் முதுகு தீய்ந்து காந்திப் போகும்படி பின்னே வருகிறவர்கள் விரைந்து மோதுகிறார்கள். இப்படி ஒருவரை ஒருவர் நெட்டித் தள்ளிக்கொண்டு போகிறார்கள், வெட்டுக் களத்திற்குப் போகும் ஆடுகளைப் போல.

இரண்டு அடிகளில் ஒரு குட்டிக் கம்ப நாடகம் இது. இதற்கு வேறு விதமாகப் பொருள் கூறுவது கம்பனின் நாடகத் திறனுக்குச் சற்றும் பொருந்தாது.



35. தீயிலும் ஈரமா?

நீல நதிக் கரையிலே (இன்றைய எகிப்து நாட்டில் அல்ல) தலைநகராகிய கெய்ரோவில் பிளேக் பிரவேசிப்பதை அரபி யாத்திரிகன் ஒருவன் கண்டு விட்டான். அதை நோக்கி அவன் 'அந்த ஊரில் உனக்கு என்ன வேலை?' என்று கேட்டான்.

'மூவாயிரம் பேர்களைக் கொல்லப் போகிறேன்' என்று பிளேக் பதில் சொல்லிற்று.

அக்கா பயம்!

யாத்திரிகன் திரும்பி வரும் போதும் பிளேக்கைச் சந்திக்க நேர்ந்தது. 'நீ முப்பதினாயிரம் பேரைக் கொன்று விட்டாயே!' என்றான் யாத்திரிகன்.

'இல்லை; நான் கொன்றதெல்லாம் மூவாயிரம் பேரைத்தான்: மற்றவரைக் கொன்று விட்டது என் அக்கா பயம்!' என்று பதில் வந்தது.

ராவண கிங்கரர்களுக்கும் அனுமனுக்கும் நடந்த போராட்டக் கதையிலும் அக்கா பயத்தின் அதிசயக் கொலைத் திறனைக் காண்கிறோம்:

ஈர்க்கப் பட்டனர்
சிலர்; சிலர் இடிப்புண்டு
பட்டார்;
பேர்க்கப் பட்டனர்
சிலர்; சிலர் பிடியுண்டு
பட்டார்;
ஆர்க்கப் பட்டனர்
சிலர்; சிலர் அடியுண்டு
பட்டார்;
பார்க்கப் பட்டனர்
சிலர்; சிலர் பயமுண்டு
பட்டார்!

[ஈர்க்க—பிடித்து இழுத்ததால். பட்டனர்—செத்தார்கள். இடிப்புண்டு—இடித்துத் தள்ளப்பட்டு. பேர்க்க—இருந்த இடத்திலிருந்து பெயர்த்தெறியவே. பிடியுண்டு—பிடிக்கப்பட்டு. ஆர்க்க—ஆரவாரிக்கும் அந்தச் சத்தத்தினாலேயே. பார்க்க—அனுமன் பார்த்த அந்தப் பார்வையினாலேயே. பயமுண்டு பட்டார்—அனுமன் கவனிக்காமலிருந்த போதிலும் பயம் பிடித்தே செத்தார்கள்.]

பிடித்திழுத்தும், இடித்துத் தள்ளியும், இருந்த இடத்திலிருந்து ஒரு பாறாங்கல்லைப் பெயர்த்தெடுத்து வீசுவது போல் ஆளைப் பேர்த்தெறிந்தும், பிடித்து அமுக்கியும், அடித்தொழித்தும் அனுமனால் கிங்கரர்கள் கொல்லப் பட்டார்கள். தவிர, அனுமன் செய்த ஆரவாரத்திலேயே செத்து விழுந்தவர்களும் உண்டு என்கிறான் கவிஞன்.

இது மட்டுமா? அனுமன் பார்த்த அந்தப் பார்வையிலேயே பட்டு விழுந்தவர்களும் உண்டு என்கிறான்.

சைவசுத்த போஜனமும்
சாதுரியப் பார்வைகளும்—

என்று பாரதியார் வருணிக்கிறாரே, அந்த வானரப் பார்வை காதற் பார்வை. இங்கே பார்வையோ சாதற் பார்வை!

இது கூட அதிசயமில்லை இந்தப் பாட்டிலே.

பயமுண்டு பட்டார்!

என்று வருகிறதே பாட்டின் இறுதியில், தேளுக்குக் கொடுக்கு மாதிரி! — பிளேக், போர் இவற்றுக் கெல்லாம் அக்காளாகிய பயதேவியின் கொலைத் திறன் தானே!

கவிஞனின் கலைத் திறன், 'கிங்கர வதை'யின் ஒரு கோணத்தை அப்படியே அகவுலகில் பார்த்து ஒரு சின்னஞ் சிறு முழுப் படமாகத் தருகிறது.

பயத்திற்கும் பயங்கரர்!

'சிலர் பயமுண்டு பட்டார்' என்று கூறுவதால், பலரும் பயமின்றி அனுமனுடன் போராடி வீரம் விளைத்துத்தான் பட்டனர் என்று ஊகிக்க வேண்டும். 'பிளேக் கொன்றது மூவாயிரம் பேரை; ஒன்பது மடங்கு கொன்றது பயம்!' என்ற அந்தப் பெருமையை இந்தக் கிங்கர யுத்தத்திலே பயம் பெறுவதற்கில்லை.

கிங்கரர்கள் பயங்கொள்ளிக ளல்லர், பயங்கரர்கள்; பயத்தையும் பயப்படுத்தக் கூடியவர்கள்!

இதோ பாருங்கள், இந்த அரக்கர்களின் பயங்கர வீராவேசத்தையும் கோபாவேசத்தையும்:

வாளினை விதிர்க்கின் -
றாரும், வாயினை
மடிக்கின் றாரும்,

தோளுறக் கொட்டிக்
கல்லைத் துகள்படத்
துகைக்கின் றாரும்,

தாள்பெயர்த்(து) இடம்பெ -
றாது தருக்கினர்
நெருக்கு வாரும்,

கோள்வளை எயிறு
தின்று தீயெனக்
கொதிக்கின் றாரும்.

[விதிர்க்கின்றாரும் — அசைப்பவர்களும். வாயினை — (இங்கே) உதடுகளை. உறக் கொட்டி — பேரொலியெழத் தட்டி. துகள் பட — தூளாகும் படி. தாள் பெயர்த்து - கால்களைத் தூக்கி. இடம் பெறாது — தூக்கிய காலை வைக்க இடம் கிடைக்காமல். தருக்கினர் — செருக்குக் கொண்டு. கோள் வளை எயிறு தின்று — வலிமையுள்ள வளைவான பற்களைக் கடித்து.]

இந்தக் கிங்கர வெள்ளத்திலே ஒரு திவலை போலிருக்கும் தனி வீரனைத் தான் பாருங்கள்;

'வரைகளை இடறுமின்'
என்றால், 'மறிகடல்
பருகுமின்' என்றால்,


'இரவியை விழவிடும்'
என்றால், 'எழுமழை
பிழியுமின்' என்றால்,

'அரவின(து) அரசினை
ஒன்றோ தரையினொ(டு)
அரையுமின்' என்றால்,

'தரையினை எடும்எடும்'
என்றால், ஒருவர் அ(து)
அமைதல் சமைந்தார்!

[வரைகளை — மலைகளை. இடறுமின் — இடறித் தள்ளுங்கள். மறி கடல் — அலை மடங்குகின்ற கடல். பருகுமின் — குடித்துவிடுங்கள். இரவியை - சூரியனை. எழு மழை — வானத்தில் எழுகின்ற மேகங்களை. அரவினது அரசினை ஒன்றோ — சர்ப்ப ராஜாவாகிய ஆதிசேஷனை மாத்திரமோ, அவன் போன்ற அஷ்ட மகா நாகங்களையும். தரையினொடு அரையுமின் — தரையோடு தரையாக அரைத்து விடுங்கள். ஒருவர் அது அமைதல் சமைந்தார் — இவர்களில் ஒருத்தரே அந்த அந்தத் தொழிலைச் செய்து முடிக்க வல்லவர்.]

இத்தகைய பயங்கரர்கள் சூரியனையும் பயமுறுத்துவது போல் தூள் பட



நடந்து ஊது கொம்புகளையும் சங்கு போர் பறைகளையும் பயங்கரமாக முழக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். இந்த முழக்கங்கள் செவியில் விழுந்ததும் அனுமன் — சுவேத



வானர மல்லவா? — கயிலை மலை போல நிமிர்ந்து நின்று பார்த்தானும்:

வெயில்விரி
கதிரவ —
னும்போய்
வெருவிட,
வெளியிடை
விண்தோய்

கயிலையின்
மலையென
நின்றான்,
அனையவர்
வருதொழில்
கண்டான்.

[வெயில்விரி கதிரவனும் — வெயிலை வீசுகின்ற சூரியனும். போய் வெருவிட — அஞ்சி விலகிப் போய் விட்டான் என்று தோன்றும்படி கிங்கரப் பெருந்திரளால் மேலெழும்பும் தூள் சூரியனை அடியோடு மறைக்க. வெளியிடை — சோலை அழிந்து இப்போது திறந்த வெளியாக இருக்கும் அந்த இடத்திலே. விண்தோய் — வானளாவிய.]

இந்த அரக்க வீரர்கள் அனுமனைப் பார்த்ததும் 'ஓஹோ இவன் தான்!' என்று சொல்லிச் சொல்லி நின்றார்களாம். 'ஆஹா, குரங்கு தானே!' என்று எண்ணியவர்களாய் 'இது' என்றும் அனுமனைச் சுட்டிக் காட்டிய வண்ணம் எதிர்த்து வந்தார்களாம்:

'இவன் இவன் இவன்' என
நின்றார், 'இது' என
முதலி எதிர்ந்தார்.

[முதலி எதிர்ந்தார் - முற்பட்டு எதிர்த்தார்கள்.]

பயங்கரருக்கும் பயம் கற்பிக்கும் ஆசான்

அநுமன் தன் அருகே விழுந்து கிடந்த ஒரு மரத்தை 'இவனே வீழ்த்திய மரம் தான்) கையில் எடுத்துக் கொண்டான். உடனே தலைகள் உருளுகின்றன ; இரத்தம் சொரிகின்றது ; சோலை யிருந்த இடம் பிணக்காடாகிறது.

கொடுமையிலும் ஹாஸ்யம் கொழிக்கிறது :

உயர்வுற விசையின்
எறிந்தான், உடலொடும்
உலகு துறந்தார் !

[உயர்வுற — உயரமாய்ப் போகும்படி. உடலொடும் உலகு துறந்தார் - உடம்போடு சொர்க்கத்தை அடைந்தார்கள், கூட்டோடே கைலாஸம் போனார்கள் என்று பிரமிக்கும்படி உடம்பு எங்கே போய்க் கீழே விழுந்தது என்பதும் அறிய முடியாமல்.]

கொற்ற வாலிடைக்
கொடுந்தொழில் அரக்கரை
அடங்கச்

சுற்றி வீசலின்,
பம்பர மாமெனச்
சுழன்றார்!

[கொற்ற வாலிடை—வெற்றி பொருந்திய வீர வாலிலே.]

இத்தகைய சூழலில் தான் பயதேவதையும் துணிந்து அநுமனுக்குப் போர்த் துணையாகிச் சில அரக்கரை வதைத்து விடுகிறது. ஆனால் நீலநதிக் கரையிலே பிளேக் தேவிக்குத் தோழியாகிச் செய்த அளவிற்கு இங்கே பய தேவி அநுமனுக்கு உதவி புரிந்தாளென்று எப்படிச் சொல்ல முடியும்?

இத்தகைய அரக்க வீரர்களை அநுமனது போர்த் திறன் என்ன பாடு படுத்துகிறது :

முட்டி னார்பட
முட்டினன் ; முறைமுறை
முடுகிக்

கிட்டி னார்படக்
கிட்டினன் ; கிரியென
நெருங்கிக்

கட்டி னார்படக்
கட்டினன்; கைகளால்
மெய்யில்

தட்டி னார்படத்
தட்டினன்-மலையெனத்
தகுவான்.

[முறை முறை முடுகி—வரிசை வரிசையாக விரைந்து. கிட்டினார் – நெருங்கி வந்தவர்கள். கிரி—மலை. கைகளால் மெய்யில் தட்டினார் – வீரத்திற்கு அடையாளமாகத் தம் கைகளால் தோள் தட்டி வந்தவர்களை. படத் தட்டினன் – தானும் தன் கைகளால் தட்டினன், அவர்கள் அப்படியே செத்து விழும்படி. மலையெனத் தகுவான் – மலையென்று சொல்லத்தக்க பெருவடிவத்தில் தோன்றிய அநுமன்.]

இத்தகைய பயங்கர விசித்திரங்களுக்கிடையே அநுமனுடைய இரக்கத்திற்கும் விசித்திரமான சான்றுகளைப் பார்க்கிறோமா, என்ன?

ஆடல் மாக்களி(று)
அனையவன் அரக்கியர்க்(கு)
அருளி,

'வீடு நோக்கியே
செல்கெ'ன்று சிலவரை
விட்டான் ;

கூடி னார்க்(கு) அவர்
உயிரெனச் சிலவரைக்
கொடுத்தான் ;

ஊடி னார்க்(கு)அவர்
மனைதொறும் சிலவரை
உய்த்தான் !

[ஆடல் மாக் களிறு அனையவன்— அசைந்தாடும் தன்மையுள்ள பெரிய ஆண்யானை போன்ற அநுமன். சிலவரை – சில அரக்கரை. கூடினார்க்கு – அப்போதுதான் கணவரை அடைந்தவராகிய இளம் பெண்களுக்கு. ஊடினார்க்கு – ஊடல் கொண்ட மனைவிமாருக்கு. உய்த்தான் – அனுப்பி வைத்தான்.]

ஆனால் இந்தக் கருணையைப் பயன்படுத்திக் கொண்டு சில கிங்கரர்களாவது தப்பிப் போனார்களா? இல்லையென்று தான் சொல்லுகிறான் கவிஞன்.

இந்தக் கிங்கர வீரர்களை யெல்லாம் கொன்றொழித்தது பயமல்ல; வீரம் தான். அநும வீரம் மட்டு மல்ல; அரக்க வீரமும் தான் !

சுந்தர ராமாயணம்



36. கண்ட கதைதான்!

அனுமனுடைய நிகரற்ற வீரமும், அந்த வயிர நெஞ்சிலே ஈரமும் இங்கரர்களை எவ்வாறு பாதித்தன? சாதாரண வீரர்களானால் அனும வீரத்திற்கு அஞ்சக்கூடும்; அந்த இரக்கத்திற்கு மேலும் அஞ்சிப் போற்றிய வண்ணம் வீடு திரும்புவதும் சாத்தியமே.

'மோகம் உற்றனராம்'

ஆனால் இந்த அரக்க வீரர்களோ, 'ராவணன் ஆணை' என்னும் மந்திரத்திலே மோகித்து மதி மயங்கி ஒரு வகை 'வசிய நித்திரை'க்கு உட்பட்டு அந்த 'ஹிப்னடிஸ' மயக்க நிலையிலேயே நடந்து கொண்டிருப்பவர்போல், அனுமன் மேல் முறை முறையாக வந்து விழுகிறார்கள்,—அந்த வீராவேசத்தைத் தங்கள் கோபாவேசத்தாலேயே சமாளித்து விடுவதுபோல.

அனுமனை நாலு திசைகளில் அல்ல, ஐந்து திசைகளிலும் வளைந்து கொண்டார்களாம். ஆம்; வானத்திலே அவன் தலைக்கு மேலே கிளம்பியும் கவிந்து கொண்டார்கள், நாற்புறமும் மேற்புறமும் ஒருங்கே கவிந்து கொள்ளும் கரு மேகங்கள் போல.



இந்த நிலையிலும் அனுமன் வெகு விரைவில் எதிரிகளை அநாயாசமாக அழித்து வெற்றிப் பெருமிதத்துடன் விளங்கப் போகிறான் என்பதையும் கவி இந்தச் செய்யுளில் குறி சொல்வது போல் சாதுரியமாகச் சுருங்கக் கூறி விளங்க வைத்துக் கொள்கிறான்:

ஆக இச்செரு
  விளைவுறும் அமைதியில்,
    அரக்கர்

மோக முற்றன –
  ராமென முறைமுறை
    முனிந்தார்,

மாகம் முற்றவும்
  மாதிரம் முற்றவும்
    வளைந்தார்,

மேகம் ஒத்தனர்;
  மாருதி வெய்யவன்
    ஒத்தான்.

[ஆக-இவ்விதமாக. இச்செரு – இந்தப் போர். விளைவுறும் அமைதியில் – நடக்கும் பொழுது. மோகமுற்றனராமென-ஒரு வகை மோக நித்திரைக்கு உட்பட்டவர்கள் போல. முறை முறை– (இங்கே) ராணுவ அமைப்பு முறை சிதறாமல் வரிசை வரிசையாக. முனிந்தார் - கோபங் கொண்டு வந்தவர்களாய். மாகம் முற்றவும்

— பெரிய வானவீதி முழுவதும். மாதிரம் முற்றவும்–திக்குக்கள் முழுவதும். வளைந்தார்–வளைந்து கொண்டவராய். மாருதி–அனுமன். வெய்யவன் – சூரியன்.]

ஒரே 'கொலை' மழை !

உடனே அனுமன் மீது எத்தனை வகையான கொலைக் கருவிகள் சோனா மேகமாய்ச் சொரிகின்றன!

எய்த, எற்றின,
எறிந்தன, ஈர்த்தன,
இகலின்
பொய்த, குத்தின,
பொதுத்தன, தொளைத்தன
போழ்ந்த,
கொய்த, சுற்றின,
பற்றின, குடைந்தன,
பொலிந்த
ஐயன் மற்பெரும்
புயத்தன புண்அளப் –
பரிதால்.

[எய்த – எய்த அம்புகளாலும். எற்றின – அடித்த கதை முதலியவைகளாலும். எறிந்தன – எறிந்த ஈட்டி முதலியவைகளாலும். ஈர்த்தன – ரம்பத்தால் இழுத்து இழுத்து அறுப்பது போல் அறுக்கும் ஆயுதங்களாலும். இகலின் – பகைமையுணர்வோடு. பொய்த – சதையைப் பிடுங்குகிற கருவிகளாலும். குத்தின – குத்திய கத்தி முதலியவற்றாலும். பொதுத்தன – முள்ளைப் போல் குத்தியேறும் கருவிகளாலும். தொளைத்தன – தொளைக்கும் கருவிகளாலும். போழ்ந்த – பிளக்கும் கருவிகளாலும். கொய்த – கிள்ளிப் பறிக்கும் கருவிகளாலும். சுற்றின – சுற்றிக் கொள்ளும் கருவிகளாலும். பற்றின – விடாமல் பிடித்துக் கொள்ளும் கருவிகளாலும். குடைந்தன–உள்ளே புகுந்து குடைந்து கொண்டிருக்கும் கருவிகளாலும். பொலிந்த – விளங்கித் தோன்றுகிற. ஐயன் மற்பெரும் புயத்தன – பெரியோனாகிய அனுமனது வலிமை பொருந்திய பெரிய புஜங்களில் உள்ளனவான. புண் அளப்பு அரிதால்–புண்களைக் கணக்கிடுவது முடியாத காரியம். ஆல் – அதிசயக் குறிப்பு.]

அரக்கருக்கும் பெருமைதான் !

இத்தனை புண்களையும் லட்சியம் செய்யாமலே அரக்கரை அநாயாசமாக அழித்துக் கொண்டிருக்கும் அனும



வீரத்தை எவ்வாறு பாராட்டுவது? அரக்கர்கள் படைக்கலங்களைச் சொரிந்து சொரிந்து புண்ணாக்கும் பொன்மேனி மீது, தேவ தேவியரும் தெய்வ முனிவர்களும் பூச் சொரிந்து போற்றுகிறார்களாம்.

இந்த அருமைத் திருமேனியில் பூவும் புண்களும் ஒரு சேர விளங்குகின்றனவாம் :

பூவும் புண்களும்
தெரிந்தில, மாருதி
புயத்தில் !


[தெரிந்தில - வேற்றுமை தெரியாதபடி ஒரு சேரப் பொலிந்தன.]

சாதுக்கள் பூச்சொரிந்து போற்றும் வீரத் திருமேனியைப் புண் செய்து போற்றியது அரக்க வீரம். இந்த அரக்க வீரத்தையும் பாராட்டுகிறது கவிஞன் கலைத்திறன் :

எஞ்சல் அக்கணத்து
அறிந்திலம்! இராவணன்
ஏவ,
நஞ்சம் உண்டவ –
ராமென அனுமன்மேல்
நடந்தார்,
துஞ்சினா ரல்ல(து)
யாவரும் அமர்த்தொழில்
தொலைவுற்(று)
அஞ்சி னாரில்லை:
அரக்கரில் வீரர்மற்(று)
யாரே ?

[எஞ்சல் – (தொகையில்) குறைவது. அறிந்திலம் – அறிந்தோம் இல்லை. அனுமன் மேல் நடந்தார் – அனுமனைத் தாக்கச் சென்றவர்கள். துஞ்சினார்கள்–செத்தார்கள். அமர் – போர். தொலைவுற்று – தொலைந்து போய். அரக்கரில் – அரக்கர்





களைக் காட்டிலும். வீரர் மற்று யாரே — வீரர்கள் வேறு யாரே.]

'கிங்கரர் வதை' வருணனைக்கு ஒரு முடிவுரை போல் அமைந்திருக்கும் இப்பாட்டு இந்த முழுப் படலத்தையும் சுருங்கக் காட்டும் ஒரு குட்டிச் சித்திரம்.

அனுமன் கொல்லக் கொல்ல அந்தக் கிங்கர சேனை குறைந்து கொண்டு தானே வந்திருக்க வேண்டும்? ஆனால் அது கடைசி க்ஷணம் வரையில் தெரியவில்லையாம்.

ஒரு கிங்கரன் செத்து விழுந்ததும், அந்த ஸ்தானத்தில் பின்னே யிருந்து வேறொருவன் வந்து நிற்கிறான்; பிணம் மறைக்கப்படுகிறது, முன்னணி ஒன்று நாசமடைந்தால் பின்னணி ஒன்று அதே ஸ்தானத்தில் குதி போடுகிறது. ஒரு பட்டாளம் அழிந்ததும், அதே இடத்தில் வேறொரு பட்டாளத்தைப் பார்க்கிறோம், 'இது வேறு' என்று தெரிந்து கொள்ளாமலே.

ராணுவக் கட்டுப்பாடும் ராவண பக்தியும் ராட்சஸ ஏகாதிபத்திய விசுவாசமும் சேர்ந்து செய்யும் சாகஸம் இது, ஜாலம் இது. இதுவரை இவர்கள் பார்த்த போர் வீரம் வேறு; அனும வீரம் வேறு. நஞ்சை உண்டவர்களுக்கு நாசம் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் அனுமனைக் கண்டவர்களான இந்த அரக்கர்களுக்கும். 'கண்டால் கொல்லும் நஞ்சு இந்தக் குரங்கு!' என்பது விரைவில் தெரிந்து விட்டது. எனினும் அஞ்சினார்களா?

இந்தப் போரில் ராவணனிடம் போய் நடந்ததைச் சொல்வதற்குக் கூட ஒரு கிங்கரனும் தப்பிப் பிழைக்கவில்லை. 'இப்படிப்பட்ட அரக்கர்களைக் காட்டிலும் சிறந்த வீரர்களும் உண்டோ!' என்ற அதிசய வினாவுடன் இந்த முடிவுரைப் பாட்டு முடிவு பெறுகின்றது.

அனுமனது கன்னிப் போர் இது. எனினும் கொல்லப்பட்ட ராவண கிங்கரர்களின் வீரத்தைப் பாராட்டும் ஒரு 'சரம சுலோகத்'துடன் முடிவு பெறுவது கம்ப நாடகம்.

வால்மீகத்தில் கிங்கர வதம்

'கிங்கரர் வதைப் படலம்' என்று விரிந்திருக்கும் கம்ப சித்திரத்திற்கு வால்மீக மூலம் எப்படி யிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்வோம். அந்த மூலமே சுருக்கம் தான்.

வலிமையில் தனக்குச் சமமாய்க் கிங்கரர்கள் என்று பெயர்பெற்ற அரக்க வீரர்களை ராவணன் அழைத்து அனுமனைத் தண்டிக்குமாறு கட்டளை யிட்டான். அந்த எண்பதினாயிரம் கிங்கரர்களும் அரண்மனையி லிருந்து வெளிப்பட்டார்கள். பெரிய வயிறும் பற்களும் உள்ளவர்கள்; கோர ரூபிகள்; போராசை கொண்டவர்கள். (இந்த ஆசையைத் தான் கம்பன் எவ்வளவு கலைச் சுவையுடன் வருணித்திருக்கிறான்!)

இந்தக், கிங்கரர்கள் தோட்டத்தின் வாசலில் தயாராக உட்கார்ந்திருந்த வானர வீரனை நெருங்கி விளக்குப் பூச்சிகள் விளக்கில் விழுவது போல் அதிவேகமாய் அனுமன் மேல் பாய்ந்தனர். நாற்புறமும் சூழ்ந்து கொண்டு, கதாயுதங்கள், சூரிய காந்தியுள்ள பாணங்கள் இருப்புலக்கைகள், பெரிய கத்திகள், சூலங்கள் முதலிய ஆயுதங்களால் அனுமனைத் தாக்கினார்கள்.

அனுமன் பூமியில் வாலை அடித்துத் திக்குக்கள் நடுங்கக் கர்ஜித்தான். தன் உடம்பை மிகவும் பெரிதாய்ச் செய்து கொண்டு இலங்கை கிடுகிடென்று நடுங்கச் சிங்கநாதம் செய்தான்.

பிறகு அனுமன் அந்த அரக்கர்களைப் பார்த்துப் பின்வருமாறு கர்ஜித்தான்: "வீரத்தில் நிகரற்ற ராமனுக்கும் லட்சுமணனுக்கும், ராமனால் காப்பாற்றப் பட்ட சுக்கிரீவனுக்கும் சமானர்கள் உண்டோ? ராமனுக்கு நான் அடிமை; எதிரிகளுக்கு யமன்; வாயு புத்திரன்; கற்களாலும் மரங்களாலும் போர் புரிகிறவன், உங்கள் ராவணனைப் போல் ஆயிரம் பேர் ஒன்று சேர்ந்தாலும் எனக்கு ஈடோ? உங்கள் கட்டுக் காவல்களைக் கடந்து சீதையை வணங்கி விருத்தாந்தம் அறிந்து, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இந்த நகரத்தை நாசஞ் செய்து நான் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு சுகமாய்த் திரும்பிப் போவேன்."

அந்தச் சத்தம் கேட்டும் அந்த வானளாவிய உருவம் கண்டும் கிங்கரர்கள் நடுங்கினார்கள். (கம்பனுடைய ராவண கிங்கரர்கள் இப்படி அஞ்சக் கூடியவரல்லர்.) ராவணனுடைய கடுமையான கட்டளைக்கு அஞ்சித்தான் இவர்கள் மாருதியைச் சூழ்ந்துகொண்டு போர் புரிந்தார்கள். அனுமன் ஓர் இருப்புலக்கையை எடுத்துச் சுழற்றிக் கிங்கர நாசம் செய்து விட்டான். மறுபடியும் யார் யுத்தத்திற்கு வரப் போகிறார்களோ என்று வழிமேல் விழி வைத்திருந்தான்.

கம்ப ராமாயணத்திலே இப்போர் ராவணேச்வரனின் அளவு கடந்த அகங்காரத்திற்கும் சூரத்தனத்திற்கும் ஏற்றதொரு தோற்றுவாயாக அமைந்து விடுகிறது.

கிங்கரர் தோற்றமும் கம்பீர வருகையும், அறியாமையும் அட்டகாசங்களும் ஆரவாரங்களும், வீரவெறியும் கோபவெறியும், ராஜ பக்தி வெறியும், அறிவுக் கண்ணை மூடிக் கொண்டு ஆழந் தெரியாத அபாயப் படுகுழிகளில் குப்புறக் குதிக்கும் குதூகலமும்,

அரக்கரில் வீரர்மற்(று)
யாரே?

என்று கவிக் கூற்றுகிய பாராட்டையும் பெற்று விடுகின்றன.

* * *

'ஆனால் இப்படி ஒரு புதுமையான கிங்கரர் கதைக்கு ஆதாரம் தான் என்ன?' என்று ராமாயண பக்தர்கள் கேட்கவும் கூடும். 'வால்மீகி ராமாயணம் தானே உண்மையாக நடந்தது?' என்பது இவர்கள் மனநிலை.

ஆனால் கிங்கரர் போரை நேரில் கண்டிருந்தால் தானே,

எஞ்சல் அக்கணத்து
அறிந்திலம்!

— இந்தக் கிங்கரர் சேனை இப்படிக் குறைந்து கொண்டு வந்ததை அப்போது நாம் அறிந்து கொண்டோமில்லையே!—என்று சொல்லியிருக்க முடியும்?

ஒரு பிரசித்தமான கீதத்தை (Hallelujah Chorus) எப்படித் தான் பாட நேர்ந்தது என்பது குறித்து மேதாவியான ஹாண்டெல் (Handel) சொல்லுகிறான்: 'பரமபதம் தன்னைத் திறந்து காட்டியது என் கண்ணுக்கெதிரே; சிங்காதனத்தில் ஆண்டவன் — பெரிய கடவுள் — புனித வெண்ணிற மேனியனாய் வீற்றிருக்கக் கண்டேன்!' என்று.

கம்பனுக்குத் தன் ராமாயணம் பிறரிடம் கேட்ட கதையல்ல, கண்ட கதை தான்!

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

37. கண்டோம் கண்களால்

(ஒரு நகைச் சுவைக் காட்சி)

ராவணன் எப்படி அறியப்போகிறான், அரக்கன் ஒருவனும் தப்பிப் பிழைக்க வில்லையே? வால்மீகத்திலே சில அரக்கர்கள் அனுமனைக் கண்டு அஞ்சிப் போர் புரியாமல் ராவணனிடம் ஓடிக் கிங்கர நாசத்தைத் தெரிவித்தார்கள். கம்பன் எப்படி இந்தச் செய்தியை அரக்கர்கோனுக்கு அனுப்பப் போகிறானோ? பார்க்கலாம்.

* * *

எங்கேயோ ஒரு மூலையில் யாரோ சிலர் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்களாம் போராட்டத்தை. வதம் முடிந்ததும் அவர்கள் ஓடுகிறார்களாம்.

பயம் பிடரியைப் பிடித்துத் தள்ளப் போகிறார்கள். நாம் ஏற்கெனவே சந்தித்திருக்கும் காவல் – தேவர்களே அவர்கள்.

அசோக வனம் அழிந்துவிட்டதால் அந்தப் பழைய காவல் – உத்தியோகம் கூட இப்போது இல்லை. சாவோலை கொண்டு போகும் புதியதோர் உத்தியோகத்தில் தம்மைத் தாமே நியமித்துக் கொண்டிருப்பது போலல்லவா தோன்றுகிறது?

முன்னே மூன்றுபேர் கடிவாளம் பிடித்திழுக்கப் பின்னே யிருந்து இரண்டு பேர் தள்ளிவிட விகடராமன் குதிரை சவாரி புறப்பட்ட கதையைக் காளமேகப் புலவர் பாடி யிருக்கிறார், ஒரே வெண்பாவில். இந்தக் காவல் – தேவர்களையோ பயம் பின்னே யிருந்து பிடரியைப் பிடித்துத் தள்ளி விடுகிறது. முன்னேயிருந்து இழுப்பாரில்லை. காலும் கையும் பின்னே இழுக்கின்றனவாம். இந்தப் பேர்வழிகள் எப்படித் தான் போய்ச் செய்தி சொல்லப் போகிறார்களோ?

இவர்கள் போகும் வைபவத்தைக் கவனிப்போம்; உற்று நோக்குவோம்.

வந்த கிங்கரர்
ஏயெனும் மாத்திரை
மடிந்தார்;

நந்த வானத்து
நாயகர் ஓடினர்
நடுங்கிப்

பிந்து காலினர்
கையினர், பெரும்பயம்
பிடரின்

உந்த ஆயிரம்
பிணக்குவை மேல்விழுந்(து)
உளைவார்!

[ஏஎனும் – 'ஏ' என்று சொல்லும் இரண்டு மாத்திரைப் பொழுதிற்குள்; மிக விரைவில். நந்தவானம் – நந்தவனம். உந்த – தள்ள. உளைவார் – வருந்துவார்.]

வழிதுறை பாராமல் எத்தனை பிணக் குவியல்கள் மீது எத்தனை குட்டிக் கரணங்கள் போட்டு உருளுகிறார்கள்! இவர்கள் எப்படி ராவண சபையை அடையப் போகிறார்களோ?

மாதம்போம் காத
வழி!

என்று காளமேகத்தின் பாடல் பெற்ற அந்தக் குதிரையின் கதிதானு இந்த நந்தவன நாயகர்களின் கதியும்?

அப்படி யொன்றும் நேர்ந்துவிட வில்லை. விரைவாகவே போய் விடுகிறார் களாம். எப்படி? இவர்களா போகிறார்கள்? பெரும் பயமல்லவா விரைவில் தள்ளிக்கொண்டு போய் ஆஸ்தான மண்டபத்திலே சேர்த்து விடுகிறது?

பேச்சா, ஆட்டமா?

ராவண சந்நிதானத்திலே இவர்கள் படும் பாட்டையும் பார்ப்போம்.

விரைவின் உற்றனர்,
விம்மினர் யாதொன்றும்
விளம்பார்,

கரத லத்தினுல்
பட்டது கட்டுரைக்
கின்றார்;

தரையில் நிற்கிலர்,
திசைதொறும் நோக்கினர்,
சலிப்பார்;

அரசன் மற்(று)அவர்
அலக்கணே உரைசெய
அறிந்தான்

[உற்றனர்–வந்து சேர்ந்தார்கள். விம்மினர் –தேம்பி அழுதார்கள். விளம்பார் – சொல்ல மாட்டாதவர்களாய். கரதலம் – (இங்கே) கைகளின் சைகை. கட்டுரைக்கின்றார் – உறுதியாகச் சொல்லுகிறார்கள். சலிப்பார்–அசைந்து ஆடுபவரானார்கள். அலக்கண் – அவஸ்தை.]

கிங்கரர் பட்டதும், தாங்கள் பட்டு வந்ததும் சொல்ல விரும்புகிறார்கள்; ஆனால், வாய் பேச மறுக்க, கை ஜாடை செய்து தான் காட்ட வேண்டியிருக்கிறதாம். பாவம், கையாவது 'ஒத்துழையாமை' செய்யாமல் அபிநயம் பிடிக்கிறதே!

இப்படி ஒரே இடத்தில் நின்று அபிநயங் காட்டிக் கருத்தை வெளியிடுவதும் சாத்தியமாக இல்லை. தரையில் நிற்பதே அசாத்தியமாகி விடுகிறது. என்ன ஆட்டம் ஆடுகிறார்கள்? தரையே சலிக்கிறதா!

நாலு திசைகளையும் ஏன் அப்படி மருண்டு மருண்டு பார்க்கிறார்கள்? எந்தத் திசையிலிருந்து குரங்கு வந்து குதித்து விடுமோ என்றுதான். எதிரே ராவண பயம், எல்லாத் திசைகளிலும் வானர பயம்—இடையே இப் பேயாட்டம்!

இந்தக் கூத்தே நிகழ்ச்சியை ஒருவாறு அறிவாளனுகிய ராவணனுக்கு அறிவித்து விடுகிறது. என்ன? கிங்கரர்கள் செத்துப் போய் விட்டார்களா?

'அப்படி யிருக்க முடியுமா?' என்று பகுத்தறிவு கேட்கிறது. அது இல்லையென்றால், ராவணன் ஆணையை இகழ்ந்து துறந்து போய் விட்டார்களா?



பகுத்தறிவு பரிகசிக்கிறது, 'ராஜபக்திக்குப் பேர்போன ராஜ சேவகர்களையா இப்படிச் சந்தேகிக்கிறாய்?" என்று. அப்படியானால் ஒருவேளை போரில் தோற்று அவமானம் பொறுக்க முடியாமல் ஆண்டி பரதேசிகளாகப் போய்விட்டார்களா?

மனைவி மக்களை மறந்தா அப்படிப் போய் விட்டார்கள்? நன்று நும் பத்து மூளைகளின் திறனும், ராவணேச்வரரே! சக்ரவர்த்தியாகிய உம்மையும் மறந்து போக முடியுமா?

மூன்று கேள்விகளையும் ராவணன்



அடிமைத் தேவர்களுக்கே போட்டுப் பார்க்கிறான். பளிச் சென்று பதில் வருகிறதா, என்ன? உடனே, 'அப்படி ஒன்றும் இல்லையென்றால் காவல் செய்து கொண்டிருக்க வேண்டிய நீங்கள் இங்கே ஏன் வந்தீர்கள்?' என்ற நாலாவது கேள்வியையும் ஆத்திரமாகத் தொடுத்து விடுகிறான்.

கேள்விகளா கேட்கிறான்? நெஞ்சிலே கர்வம் பொங்க, வாய்கள் நெருப்பைக் கக்குகின்றனவாம்:

'இறந்து நீங்கின -
ரோ? இன்(று)என் ஆணையை
இகழ்ந்து
துறந்து நீங்கின -
ரோ? அன்றி வெஞ்சமர்
தொலைந்தார்
மறந்து நீங்கின -
ரோ? என்கொல் வந்த(து)?'
என்(று)
உரைந்தான்,
நிறம்செ ருக்குற
வாய்தொறும் நெருப்-புமிழ்
கின்றான்.

[வெஞ்சமர் — கொடிய போர். தொலைந்தார் — தோற்றவர்களாய்.

என்கோல் – என்; என்னை. நிறம் – (இங்கே) மார்பு; நெஞ்சு. செருக்கு உற – கர்வம் அதிகரிக்க.]

‘தோற்றவர் பாட்டு’

ராவணன் தன் சந்தேகத்தை முதல் முதல் பட்டவர்த்தனமாகக் கேட்டு விட்ட போதிலும் கிங்கரர்கள் செத்துப் போய்விட்டார்கள் என்பதைப் பட்ட வர்த்தனமாக உடனே சொல்லிவிட அடிமைத் தேவர்களுக்கு நெஞ்சுத் துணிவு இருக்க முடியுமா? கிங்கர வீரர்களின் கோபதாபங்களைச் சற்று வருணித்து விட்டு, அற்பக் குரங்கோடு சண்டை போடுவதா என்று அவர்கள் வருந்தவில்லை என்கிறார்கள்.

எனவே ராவணன் ஆணையைப் புறக்கணிக்கவில்லை, கௌரவித்துப் போர் புரிந்தார்கள் என்று தெரிகிறது. அப்படியானால் குரங்கைக் கொன்றோ, பிடித்துக் கொண்டோ திரும்பியிருக்கலாமே?

தோற்றுப்போய், ராவணனுடைய இறுதிச் சந்தேகம் போல், பரதேசம் போய்விட்டார்களா? போர் முனையில் அஞ்சி முதுகு காட்டவும் இல்லை என்பதையும் வற்புறுத்துகின்றார் காவல் – தேவர்கள்.

இப்படி யெல்லாம் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் சம்பிரதாயமாகப் பேசுகிறார்கள். இதற்குள்ளே ராவணன் நடந்ததை ஊகித்துக் கொள்ளலாமல்லவா?

அதற்கும் உடனே இடங்கொடாமல், ‘ஒரு நீதி மன்றம்; அங்கே ஒரு சாட்சி...’ என்று ஏதோ கதை படிக்கிறார்கள். அந்தக் கதையோடு கதையாகத் தான் சொருகி விடுகிறார்கள் கிங்கரர் கதையையும்.

வந்த தேவர்கள் கூறிய இந்த விடையின் கவியுருவம் இது:

‘சலம்தலைக் கொண்டனர்—
ராய தன்மையார்
அலந்திலர்; செருக்களத்(து)
அஞ்சி னாரலர்;
புலம்தெரி பொய்க்கரி
புகலும் புன்கணார்
குலங்களின் அவிந்தனர்
குரங்கி னால்!’ என்றார்.

[சலம் – கோபம். தலைக் கொண்டனர் ஆய தன்மையார் – தலைக்கேறப் பெற்றவராகிய அந்தக் கிங்கரர்கள். அலந்திலர்–வருந்திப் போய்விடவில்லை. புலம் தெரி பொய்க் கரி–தம் அறிவுக்குப் பொய் என்று தெரிந்த அந்தப் பொய்ச் சாட்சியை. புகலும் புன்கணார் – சொல்லித் துன்பத்தைத் தேடிக் கொள்வோரின். குலங்களின் – குலங்கள் போல.]

ஜப்பான் தேசம், ராணுவச் செருக்குடன் இருந்த காலத்திலே ரவீந்திர நாத தாகூரின் தெய்வ கீதங்களைத் ‘தோற்றவர் பாட்டு’ என்று பரிகசித்ததாம். ராவணனும் அப்படித் தான் மதித்திருக்க வேண்டும் அடிமைத் தேவர்களின் சன்மார்க்க உபமானத்தை.

அதட்டி விளைத்த அனர்த்தம்

அந்தச் செய்தி கூடப் பெரிதன்று: அது சபாமண்டபத்திலே அவ்வளவு பகிரங்கமாக அன்னியர் செவியில் ஏறியதென்றால், ஏகாதிபத்திய இறுமாப்பு எப்படிப் பொறுத்திருக்க முடியும்?

ஏவலின் எய்தினர்
இருந்த எண்திசைத்
தேவரை நோக்கினன்,
நாணும் சிந்தையான்,
‘யாவதென்(று) அறிந்திலிர்
போலு மால்?’ என்றான்,
மூவகை உலகையும்
விழுங்க மூள்கின்றான்.

[விழுங்க மூள்கின்றான் – விழுங்கத் தொடங்குவது போன்ற சினங் கொண்ட ராவணன்.]

நிபுணரான வழக்கறிஞர் ஒருவர் குறுக்கு விசாரணை செய்வது போல், ‘கேட்டதோ, கண்டதோ? தைரியமாகச் சொல்லுங்கள்’ என்று நயமும் பயமுமாகக் கேட்கிறான்.

‘கேட்டதோ?’ என்பதை எதுகையில் வைத்து அழுத்திக் கூறியும், அடிமைத் தேவர்கள் அந்தாதி பாடும் புலவர்கள் போல்,

கண்டனம் ஒருபுடை
நின்று கண்களால்

[புடை – பக்கம்.]
என்று தொடங்கித் தாம் கண்ட கிங்கர வதையை அப்படியே அழுத்திக் கூறி முடிக்கப் போகிறார்கள்!

சுந்தர ராமாயணம்




38. விருந்து வந்ததா?

'ஒரு புறமாக ஒதுங்கி ஒடுங்கி மறைந்திருந்து தான் கண்டோம் ஐயா ராவணேச்வரரே! இல்லா விட்டால் நாங்களும் மறைந்தே போயிருப்போம்!' என்று தங்கள் சாமர்த்தியத்தைத் தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள். 'கண்டனம்........கண்களால்!'— சொந்தக் கண்களாலேயே பார்த்து விட்டார்கள், பிறர் கண்களை இரவல் வாங்கிக் கொள்ளாமலே!

ஒரு போர்ப் படக்காட்சி

இப்படித் தொடங்கிய வேகத்திலே, உள்ளத்திலே கிடந்த அந்தப் போர்க் காட்சி ஒரு பேசும் படக் காட்சியாகப் புறப்படுகிறது. முதல் முதல் ஒரு சமுத்திரம் விரிந்து பொங்குகிறது. அலை மேல் அலை யெறிந்து மோதுகிறது.

இந்தச் சமுத்திரம் ('தெண்டிரைக் கடல்') நாலு புறமும் பொங்கி வளைந்து கொள்ள, நடுவிலே அகப்பட்டுக் கொண்டது குரங்கு என்பது போல ஒரு காட்சி. அந்தக் குரங்கு பட்டபாடு — இல்லை, படுத்திய பாடு ... எப்படிப் போகிறது கதை?



ஆம், கிங்கர சமுத்திரம் தான்; நடுவிலே அகப்பட்டுக் கொண்ட குரங்கு படுத்திய பாடு தான் — நமன் கையில் பட்டபாடு தான் கிங்கரர் பட்ட பாடு! மண்டலமிட்டுச் சுழன்றது மரமும் கையுமாக — அந்த ஒரே மரம் அத்தனை உயிர்களையும் அதிசயமாக உண்டு விட்டது.

இந்தப் படக் காட்சியைப் பார்த்து விடுகிறது, ராவண சபை:

'கண்டனம் ஒருபுடை
நின்று கண்களால்;
தெண்டிரைக் கடலென
வளைந்த சேனையை,
மண்டலம் திரிந்ததொர்
மரத்தினால் உயிர்
உண்டதக் குரங்(கு); இனம்
ஒழிவ தன்றெ'ன்றார்.

[புடை – பக்கம். தெண்டிரை – தெளிவான அலை. இனம் – இன்னம்.]

இந்தப் 'பாட்டின் கொடுக்கு' எப்படிக் கொட்டியிருக்க வேண்டும் காதிலே, தேள் கொட்டியது போல! 'அந்தக் குரங்கு இன்னம் அங்கே தான் இருக்கிறது; சனியன் ஒழிந்தபாடில்லை!' என்று சொல்லி முடித்ததும் ராவண கோபத்தைச் சொல்ல வேண்டுமா?

போர்ச் சினம் புறப்படுகிறது

நல்ல வேளையாக அந்தக் கோபப் பார்வை தேவர்கள் பக்கம் திரும்பாமல் தற்செயலாக ஒரு ராட்சஸ வீரன் மீது விழுகிறது. இந்தப் பார்வைக்

குத் தானே தவித்துக் கொண்டிருக்கிறான் இவன் !

உத்தரவை எதிர்பார்த்துக் கைகூப்பிக்கொண்டு, படமெடுக்கும் பாம்பைப் போல் சீறிக் கொண்டிருக்கிறான். 'அடா சம்புமாலி, நீ பிடித்து வாடா அந்தக் குரங்கை' என்று தானே உத்தரவு போட வேணும் ?

இப்போது யஜமான் எவ்வளவு ஜாக்கிரதையாகப் பேசுகிறான் பாருங்கள் :

கூம்பின கையன்,
நின்ற குன்றெனக்
குவவுத் திண்தோள்,

பாம்(பு)இவர், தறுகண்
சம்பு மாலிஎன்–
பவனைப் பாரா,

'வாம்பரித் தானை
யோடு வளைத்(து)அதன்
மறனை மாற்றித்

தாம்பினில் பற்றித்
தந்தென் மனச்சினம்
தணித்தி !' என்றான்.

[கூம்பின–கூப்பின. குவவுத் திண் தோள்–திரண்ட வலிய தோள்கள். பாம்பு இவர் – பாம்பை ஒத்த. தறுகண்–அஞ்சாமைக் குணம். பாரா—பார்த்து. வாம் பரி–தாவிச் செல்லும் குதிரை. தானை–சேனை. மறன்–வலிமை. தாம்பு–கயிறு. தணித்தி–தணியச் செய்வாய்.]

'குரங்கு இன்னம் ஒழிந்த பாடில்லை' என்று தேவர்கள் தெரிவித்த போதிலும், 'அது வேகமாய்த் தப்பி ஓடிவிடுமோ ?' என்பது தான் இன்னும் ராவணன் கவலை. எனவே குதிரைப் படைத் தலைவனை ஏவுகிறான்.

அந்தக் குரங்கைக் கட்டிக் கொண்டு வருவதற்குக் கயிறு கொண்டு போக வேண்டும் என்பதையும் ஞாபகப் படுத்துகிறான். அற்ப விஷயங்களையும் ராணுவ மகா நிபுணர்கள் அதி ஜாக்கிரதையாக முன் கூட்டியே கவனிப்பார்களல்லவா ?

பர்மா அரசன் ஒருவன் வெள்ளைக்காரர் தலைவனைப் போரில் வென்று கட்டிக்கொண்டு வருவதற்காக ஒரு தங்கச் சங்கிலியையும் அனுப்பி வைத்தானாம் தளபதியிடம். வெற்றி வெள்ளையருக்குக் கிடைத்து விடவே, அவர்கள் அந்த அரசனைக் கட்டிச் சிறையில் வைத்தார்கள். அவன் அனுப்பிய தங்கச் சங்கிலியையாவது அவனைக் கட்டுவதற்கு உபயோகப்படுத்தி யிருப்பார்களா ? செம்பொன் வேறு விதமாகப் பயன்படுமே என்று கரும் பொன் (இரும்பு) னால் செய்த சங்கிலியையோ, சாதாரணமான கயிற்றையோ தான் உபயோகித்திருக்கக் கூடும்.

இங்கே அனுமனைக் கட்டச் சம்புமாலி கொண்டு போன கயிற்றின் கதியைக் குறித்துக் கவிஞன் ஏதாவது சொல்லப் போகிறானா ? சம்புமாலியின் பரிவாரத்திலும் பலர் கயிறுகள் கொண்டு போகிறார்களாம், —'நான் பிடித்து வருவேன் குரங்கை, நானே பிடிப்பேன் !' என்பதாகப் போட்டி போட்டுக் கொண்டு.

போகட்டும் ; சம்புமாலியின் கதியும் முன் கூட்டியே நமக்குத் தெரிந்தது தான். ஆனால் இந்த அற்பாயுசுக்காரனின் குதூகலத்தையும் ராஜபக்தியையும் தான் என்னென்பது ?

இதோ இந்த ஜாலக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள், அந்த முகத்தோடு அகத்தையும் ;

ஆயவன் வணங்கி,
'வீரம் அளக்கரும்
அளக்கர் முன்னர்,

"நீஇது முடித்தி !"
என்று நேர்ந்தனை
நினைவின் எண்ணி

ஏயினை என்னப்
பெற்றால் என்னின்யார்
உயர்ந்தார் ?' என்னாப்

போயினன், இலங்கை
வேந்தன் போர்ச்சினம்
போவ தொப்பான் !

[ஆயவன் – அந்தச் சம்புமாலி. வீரம் அளக்கரும் அளக்கர் — அளத்தற்கு அரிய வீர சமுத்திரம். முடித்தி —முடிப்பாய். நேர்ந்தனை — சம்மதித்தவனாய். ஏயினை — ஏவினாய். என்னப் பெற்றால் — என்று கூறும் பாக்கியத்தைப் பெற்றேனா



னால். என்னில்—என்னைக் காட்டிலும். என்னா – என்று எண்ணிக் கொண்டே.]

பொங்கிக் கொண்டிருக்கிறதாம் ஒரு சமுத்திரம் ராவணனுக்கு முன்னே. 'இந்த வீர சமுத்திரத்திலே நான் யார்? ஒரு திவலை தானே! இந்தத் திவலைக்குத் தான் என்ன அதிர்ஷ்டம்!' என்று குதி போடுகிறது சம்புமாலி குதூகலம்.

இந்தத் திவலையைப் பார்த்துச் சக்கரவர்த்தி எவ்வளவு பட்சபாதமாக மற்றவர்கள் கண்ணுக்கெதிரே, 'நீ தான் இதைச் செய்து முடிப்பாய்' என்று நிச்சயித்து விட்டானல்லவா? 'அந்தத் திருவுள்ளத்திலே தான் என்ன நினைப்பு என்னைப் பற்றி? எவ்வளவு மதிப்பு!' என்று உருகுகிறது சம்புமாலியின் உள்ளம். 'இவ்வளவு பாக்கியத்தைப் பெற்ற என்னைக் காட்டிலும் உயர்ந்தவர் யார்?' என்று உயர்ந்தே போகிறான்!

சம்புமாலியா போகிறான்? பிரதாப லங்கேச்வரனுடைய போர்ச் சினமல்லவா அப்படி உருவெடுத்துத் தேரில் குதித்து ஓடுகிறது?

நால்வகைச் சேனையும் செல்லுகிறது சம்புமாலியுடன். எனினும் குதிரைப் படைத் தலைமை சம்புமாலியின் சிறப்பியல்பல்லவா?



சம்புமாலியைக் கூட்டமாகத் தொடர்ந்து போகிற அந்தக் குதிரைகளை ஒரு பார்வை பார்க்கலாம்;

காற்றினை மருங்கில்
கட்டிக் கால்வகுத்(து)
உயிரும் கூட்டி,
கூற்றினை ஏற்றி
அன்ன குலப்பரி
குழுவ...

[மருங்கில் கட்டிக் கால் வகுத்து – (நாலு பக்கத்திலும்) கட்டி நாலு கால்களையும் உண்டாக்கிக் கொண்டு. கூற்றினை ஏற்றி அன்ன—யமனை மேலே ஏற்றிக் கொண்டாற் போல் வீரரைத் தம் மீது கொண்ட. குலப் பரி—நல்ல சாதிக் குதிரைகள். குழுவ – கூட்டமாகத் தொடர.]

தம் மனம் போலத் தாவி ஓடும் குதிரைகள் மீது குதிரை வீரர்கள் சுற்றப் பிற வீரர்களும் சுற்றச் சம்புமாலி போகும் போது, தேவர்களைச் சுற்றிக் கொள்கிறதாம் அச்சம்:

அந்நெடுந் தானை
சுற்ற, அமரரை
அச்சம் சுற்றப்
பொன்னெடுந் தேரில்
போனான், பொருப்பிடை
நெருப்பிற் பொங்கித்
தன்னெடுங் கண்கள்
காந்தத், தாழ்பெருங்
கவசம் மார்பில்
மின்னிட வெயிலும்
விச, வில்லிடும்
எயிற்று வீரன்.

[அந்நெடுந்தானை – அந்தப் பெரிய சேனை. அமரரை – தேவர்களை. பொருப்பிடை நெருப்பின் – மலையிலுள்ள நெருப்பைப் போல. காந்த–ஜொலிக்கவும். தாழ் – தங்கிய. மின்னிட வெயிலும் வீச – மின்னலோடு வெயில் போன்ற ஒளியை வீசவும். வில்லிடும் எயிற்று வீரன் – வில்லின் உருவம்போல் ஒளி வீசுகிற கோரப் பற்களையுடைய சம்புமாலி.]

விருந்தாகப் போகிறார்களா ?

சம்புமாலி போய்க் கொண்டிருக்கும் மிடுக்கு இது. நம்மையும் தான் அச்சம் சுற்றிக் கொள்கிறது, 'ஒரு கால் அனுமனுக்குத் தோல்வி நேருமோ ?' என்று. ஆனால் அந்த ராமதூதனோ,

'வந்திலர் அரக்கர் !'
என்னும் மனத்தினன்,
வழியை நோக்கி,

விழி வைத்த வண்ணம் காத்துக் கொண்டிருக்கிறான்.

எங்கே ? அழிந்து போன அந்தச் சிங்கார வனத்தின் தோரண வாசலில் தான். அந்த வெளிவாசல் மட்டும் அழியாமல் நின்று கொண்டிருக்கிறதாம். பலவகை இரத்தினங்கள் இழைத்திருப்பதால் பன்னிறங்களுடன் வசீகரமாய்க் காணும் வானவில்லைப் போல் காண்கிறதாம்.

சிங்காரச் சோலையைப் பாழாக்கி விட்டு இந்த வசீகரமான தோரண வாசல் மீது ஏறி யிருக்கிறானும், 'ஜாதி' சுபாவம் தோன்ற :

இந்திர தனுவின்
தோன்றும் தோரணம்
இவர்ந்து நின்றான்.

[தனுவின் – வில்லைப் போல. இவர்ந்து நின்றான் – ஏறி நின்றான்.]

இப்போது அனுமன் செய்யும் ஆரவாரமும் தேவர்களை நடுங்கத் தான் செய்கிறது, தேவரோடு அரக்கரையும் தான். இந்த அரக்கர்களின் நெஞ்சிலேயே அச்சம் குடிபுகுந்து இனி நடக்கப் போகும் போரில் அனுமனுக்கு வெற்றியை எளிதாக்கி விடுகிறது என்று ஊகிக்கலாம்.

ஆம்; அனுமனுடைய வரவேற்பு ஆரவாரம் அப்படி ராமன் வில்நாணியைத் தெறித்தாற்போலப் போய்ச் செவிகளில் இடித்து நெஞ்சுகளில் குடியேறுகிறதாம்.

கொல்லிய அரக்கர்
நெஞ்சில் குடிபுக
அச்சம், வீரன்
வில்லென இடிக்க,
விண்ணோர் நடுக்குற,
வீரன் ஆர்த்தான்

[கொல்லிய அரக்கர் – கொல்லும் தன்மை யுள்ள அரக்கர்களுடைய. நடுக்குற – நடுங்கிப் போகவும். ஆர்த்தான் – ஆரவாரித்தான்.]

இங்கே ராமதூதனின் ஆரவாரத்திற்கு ராமனது கோதண்டத்தின் டங்கார ஓசையை ஒப்பிட்டதுடன், இருவரையும் 'வீரன்' என்றே குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

இந்த ஆரவாரத்தோடு ஆரவாரமாக அரக்கர்களும் ஆரவாரிக்கிறார்கள், — நெஞ்சிலே குடிபுகுந்த அச்சத்தை அடித்தும் இடித்தும் தள்ளுவது போல. அலைகடல் போல் ஆரவாரித்துப் பொங்கி அனுமனை மூழ்கடிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் அனுமன் இருக்கும் இடத்திற்கு வருவதே சிரமமாக இருக்கிறதாம்.

ஏனென்றால் குன்றுகளும் வெள்ளமும் தடுக்கின்றனவாம். எப்படி ? எல்லாம் தங்கள் பந்துமித்திரர்களுடைய இரத்த வெள்ளம் தான், பிணக் குன்று தான் :

'எவ்வழிச் சேறும் ?'
என்றார், தமர்உடம்(பு)
இடறி வீழ்வார்.

[எவ்வழிச் சேறும்–எவ் வழியால் சென்று சேருவோம். என்றார்–என்று திகைத்தார்கள். தமர் உடம்பு–தம் உறவினர்களின் உடம்புகள் மேல்.]

எனினும் இந்த நிலைமையையும் சமாளித்துக் கொண்டு சம்புமாலி அணி வகுத்து நெருங்குகிறான்; அனுமனை நெருக்கப் பார்க்கிறான்.

தோரணத்திலிருந்து சாதுரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அனுமனுக்கோ கொண்டாட்டம் தான் :

வேண்டிய(து) எதிர்ந்தான்
என்னா வீங்கினன்
விசயத் திண்தோள்.

[விசயத் திண்தோள்–வெற்றி பொருந்திய வலிய தோள்கள்.]

சுந்தர ராமாயணம்



39. பிடிக்க வந்தவர்கள் பட்ட பாடு

அணியணியாக அனுமனை நெருங்கி வந்த அரக்கர்கள் அனுமனுடைய பூரிப்பைக் கண்டதும், தங்கள் உள்ளங்களில் பகைமையும் கொடுமையும் கோபமும் பொங்க, ஊது கொம்புகளும் சங்குகளும் வேறு வாத்தியங்களும் கோஷிக்க, விற்களை டங்காரம் செய்தார்கள். நாலு புறமும் ஒரே மழைதான்—கோலைக் கருவிகளின் பொழிவுதான்!

தோரண வாசல்மீது கொலுவிருப்பது போல் இருந்த அனுமனுக்கு எது ஆயுதம்? அந்த வாசற் கதவை உள் வாசற்படியில் தடுக்கும் குறுக்கு மரமாகிய எழு என்ற அந்த இருப்புத் தடியைக் கையில் எடுத்துக் கொள்கிறான். வல்லவனுக்குப் புல்லும் போதுமே,—எழுவும் கிடைத்தால்?

எழுவுடனும், இல்லாமலும்

பிறகு என்ன செய்கிறான்? அதைத் தான் நன்றாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்கிறான் கவிஞன்:

'இருந்தனன், எழுந்தனன்,
இழிந்தனன், உயர்ந்தான்,

திரிந்தனன், புரிந்தனன்'
எனநனி தெரியார்,

விரிந்தவர் குவிந்தவர்,
விலங்கினர் கலந்தார்,

பொருந்தினர் நெருங்கினர்
களப்படப் புடைத்தான்.

[இருந்தனன் – தோரணத்தின் மேல் உட்கார்ந்திருந்தான். இழிந்தனன் – கீழே இறங்கினான். திரிந்தனன்—நடுவே திரிந்து கொண்டிருந்தான். புரிந்தனன் – ஏதேதோ செய்து கொண்டிருந்தான். என நனி தெரியார் – என்று நன்றாகத் தெரிந்து கொள்ள மாட்டாதவர்களாய். விரிந்தவர் குவிந்தவர் – பரவலாக நின்றவர்களும். குவிந்து, திரண்டிருந்தவர்களும், விலங்கினர் கலந்தார் – விலகி நின்றவர்களும். போரில் கலந்து நின்றவர்களுமாக. பொருந்தினர் – பொருந்தின அரக்கர்களெல்லாம். நெருங்கினர் களப்பட – போர்க்களத்தில் நெருங்கிப் பலியாகும் படி. புடைத்தான் – அந்த எழுவினால் அடித்துத் தள்ளினான்.]

அனுமன் தன் இடக் கையால் பகைவர் வீசும் படைக்கலங்களை அடித்துத் தள்ளித் தற்காப்புச் செய்து கொள்வதும், வலக்கையினால் எதிரிகளின் படைகளை அழிப்பதுமாய், இரு கைகளும் ஒரு சேரத் தொழிற்படுமாறு போர் புரிகின்றான். யானைகள் அழியத் தேர்கள் அழியக் குதிரை வீரர்கள் அனுமனைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

இதோ குதிரைகள் படும் பாடு:

ஒடிந்தன, உருண்டன,
உலந்தன, புலந்த,

இடிந்தன; எரிந்தன,
நெரிந்தன, எழுந்த,

மடிந்தன, மறிந்தன,
முறிந்தன. மலைபோல்

படிந்தன, முடிந்தன,
கிடந்தன பரிமா.

[ஒடிந்தன சில குதிரைகள் கழுத்து ஒடிந்து விழுந்தன. உருண்டன – சில

அடிபட்டு விழுந்து உருளலாயின. உலந்தன – இறந்து போயின சில. புலந்த– துன்பப்படுவன. இடிந்தன – இடிக்கப் பட்டு விழுந்தன. எரிந்தன – ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்கிப் பிறக்கின்ற தீயில் வெந்து போயின. நெரிந்தன – எலும்புகள் நொறுங்கிப் போயின. எழுந்த மடிந்தன – அடிபட்டு விழுந்த குதிரைகளில் சில எழுந்து மடிந்து விழுந்தன. மறிந்தன – கீழ் மேலாக விழுந்தன. முறிந்தன - கால் முறிந்து விழுந்தன. மலைபோல் படிந்தன. மலைபோல் நிலத்தில் படிந்து கிடந்தன. முடிந்தன கிடந்தன – துடிப்பு முடியச் சும்மா கிடந்தன. பரிமா–அந்த அரக்க வீரர்கள் ஏறி வந்த குதிரைகள்.]

பாருங்கள் அதோ அந்த வீரர்களின் கதி :

வெருண்டனர் வியந்தனர்,
விழுந்தனர், எழுந்தார் ;
மருண்டனர் மயங்கினர்;
மறிந்தனர், இறந்தார்;
உருண்டனர், உலைந்தனர்;
உழைத்தனர்; பிழைத்தார்
சுருண்டனர் புரண்டனர்;
தொலைந்தனர் மலைந்தார்.

[வெருண்டனர் - குதிரைகள் அடிபட்டு விழவே அச்சம் கொண்டவராகவும். வியந்தனர் – ஆச்சரியங் கொண்டவர்களாகவும் விழுந்தனர். எழுந்தார் – கீழே விழுந்தவர்கள் எழுந்து நின்றார்கள். மருண்டனர் மயங்கினர் – அனுமன் குதிரைகளுக்கிடையே புகுந்து காட்டும் அழிவுத்திறன் கண்டு திடுக்கிட்டு மருண்டு புத்தி மாறாட்டம் அடைந்தார்கள். மறிந்தனர் இறந்தார்– சிலர் அந்த மயக்க நிலையிலும் மீண்டும் போர் செய்து இறந்தார்கள். உருண்டனர் உலைந்தனர் - சிலர் அடிபட்டு விழுந்து வருத்தத்துடன் உருண்டு கொண்டிருந்தார்கள். உழைத்தனர் – சிலர் மிக்க வருத்தம் அடைந்தார்கள். பிழைத்தார் சுருண்டனர் புரண்டனர் – பிழைத்துக் கொண்டவர்களும் பயத்தால் சுருண்டு விழுந்து பூமியில் புரண்டார்கள். தொலைந்தனர் மலைந்தார் – உயிர் தப்ப முயலாமல் சண்டை போட்டவர்களெல்லாம் தொலைந்தே போய் விட்டார்கள்.]

அனுமன் எழுவினால் செய்த போர் இது. பிறகு கையிலிருந்த எழுவைக் கொஞ்சம் கீழே வைத்து விட்டுப் போர் செய்கிறான். இப்போது இவனுக்குப் போர்க் கருவிகள் எவை?

கரிகொடு கரிகளைக்
களப்படப் புடைத்தான் ;
பரிகொடு பரிகளைத்
தலத்திடைப் படுத்தான் ;
வரிசிலை வயவரை
வயவரின் மடித்தான் ;
நிரைமணித் தேர்களைத்
தேர்களின் நெரித்தான்.

[கரிகொடு – யானைகளைக் கொண்டு. களப்பட – போர்க்களத்தில் பட்டு விழும்படி. புடைத்தான் – மோதி அடித்தான். பரி – குதிரைகள், தலத்திடைப் படுத்தான் – பூமியில் வீழ்த்தி அடித்தான். வரிசிலை வயவரை – கட்டமைந்த வில்லையுடைய காலாள் வீரரை. வயவரின் மடித்தான் – காலாள் வீரரைக் கொண்டே மடியச் செய்தான். நிரைமணித் தேர்களை – வரிசையாக மணிகள் கட்டிய தேர்களை. தேர்களின் நெரித்தான் - அப்படிப்பட்ட தேர்களால் நொறுக்கினான்.]




இந்தப் போர் எவ்வளவு பயங்கரமாகவும், எவ்வளவு கொடுமையாகவும் வருணிக்கப்படுகிறது! இதோ அனுமனின் கால்வண்ணம் :

மூளையும் உதிரமும்
 முழங்கிருங் குழம்பாய்
மீளிருங் குழைபடக்
 கரிவிழுந் தழுந்தத்
தாளொடும் தலையுகத்
 தடநெடுங் கிரிபோல்
தோளொடும் நிருதரை
 வாளொடும் துகைத்தான்.

[உதிரமும் – இரத்தமும். முழங்கு இருங் குழம்பாய் – முழங்குகின்ற மிக்க குழம்பாகி. மீள் இருங்குழைபட – கண்டவர் அஞ்சி மீள்கின்ற மிக்க சேறாகி விட. கரி விழுந்து அழுந்த – அந்தச் சேற்றிலே யானைகளும் விழுந்து அழுந்தும்படி. தாளொடும் தலைஉக – கால்களோடு தலைகளும் சிதறி விழவும். தட நெடுங்கிரி போல் தோளொடும்-பெரிய நீண்ட மலை போன்ற தோள்களோடும். நிருதரை – அரக்கர்களை. துகைத்தான் – காலால் மிதித்துத் துவைத்தான்.]

சில அரக்க வீரர்கள் யானைமேல் வந்தார்களாம், வில்லும் வேலும் ஏந்திய கைகளுடன், வீரவாதம் செய்யும் வாயினராய். என்ன பாடுபடுகிறார்கள் இதுவும் கால் வண்ணம் தான் :

மல்லொடு மலைமலைத்
 தோளரை, வளைவாய்ப்
பல்லொடும்
 நெடுங்கரப்
 பகட்டொடும்,
 பருந்தாள்
வில்லொடும்
 அயிலொடும்,
 விறலொடும்,
 விளிக்கும்
சொல்லொடும்
 உயிரொடும்
நிலத்தொடும்
 துகைத்தான்.



[மல்லொடு மலை மலைத் தோளரை — வலிமையோடு சண்டை போடுகின்ற மலைபோன்ற தோள்களையுடைய வீரர்களை. வளை வாய்ப் பல்லொடும் - அவர்கள் வாயிலுள்ள வளைந்த பற்களோடும். நெடுங்கரப் பகட்டொடும் — அவர்கள் ஏறி வந்த நீண்ட துதிக்கையுள்ள ஆண் யானைகளோடும். பருந்தாள் வில்லொடும் அயிலொடும் — அவர்கள் கையிலுள்ள பருமையான அடியையுடைய வில்லோடும் வேலோடும். விறலொடும் — அந்த வில்லையும் வேலையும் அவர்கள் பிரயோகித்த அந்தப் பராக்கிரமத்தோடும். விளிக்கும் சொல்லொடும் — அவர்கள் கூவுகின்ற அந்த வீரவாதச் சொற்களுடனும். நிலத்தொடும் துகைத்தான் — நிலத்தோடு நிலமாகும்படி மிதித்துத் துவைத்தான்.]

போர்க்களத்திலே அந்தச் சூரவெறியர்களிடையே—அனுமனுடைய அதிவிர சாகஸ சஞ்சாரங்களைப் பாருங்கள்:

புகைநெடும் பொறிபுகும்
திசைதொறும் பொலிந்தான்,
சிகைநெடுஞ் சுடர்விடும்
தேர்தொறும் சென்றான்;
தகைநெடுங் கரிதொறும்
பரிதொறும் சரித்தான்;
நகைநெடும் படைதொறும்
தலைதொறும் நடந்தான்.

[புகைநெடும் பொறி புகும் திசைதொறும் — புகையும் நீண்ட நெருப்பும் பொறிகளும் புகுந்த போர்க்களத்தின் திசைகளில் எல்லாம். பொலிந்தான் — விளக்கமாய்க் காணப்பட்டான். சிகை நெடும் சுடர் விடும் தேர்தொறும் — சிகரத்தோடு மிக்க ஒளிவீசும் தேர்கள் தோறும். தகை நெடும் கரிதொறும் — பெரிய பெரிய யானைகள் மீதும். பரிதொறும் — குதிரைகள் மீதும். சரித்தான் — சஞ்சரித்தான். நகை நெடும் படை தொறும் - அரக்க வீரர்கள் கையிலே தன்னை நோக்கிப் பரிகாசச் சிரிப்புச் சிரிப்பது போல விளங்கிய நீண்ட ஆயுதங்கள் மேலும். தலை தொறும் - தலைகள் மேலும்.]

இப்படியெல்லாம் தட்டுத் தடையின்றி நடந்தும் மிதித்தும் காற்றாடி போலத் திரிந்து கொண்டிருந்த அனுமன், அந்த எதிரிகளின் கண்ணெதிரே தோன்றியது போல் உள்ளத்திலும் கலந்து பயமுறுத்துகிறானாம்:

கண்ணினும் மனத்தினும்
தனித்தனிக் கலந்தான்.

கடைசி அணியும் நாசம்

எனினும் அரக்கர்கள் பயந்து ஓடினார்களா? பெரு முழக்கத்துடன் உள்ளும் புறமும் ஒரே கறுப்பாய் மேன்மேலும் வந்து கொண்டிருக்கிறார்கள்:

கறுத்தெழு நிறத்தினர்,
எயிற்றினர், கயிற்றார்,
செறுத்(து)எரி விழிப்பவர்,
சிகைக்கழு வலத்தார்,
மறுத்தெழு மறலிகள்
இவரென எதிர்ந்தார்,
ஒறுத்(து)உருத் திரன்எனத்
தனித்தனி உதைத்தான்.

[கறுத்து எழு நிறத்தினர் — உள்ளம் போல் உடம்பும் கறுத்து எழுவது போன்ற நிறமுடையவர்கள். எயிற்றினர் — கோரப் பல் உடையவர்கள். செறுத்து எரி விழிப்பவர் - பகைத்துத் தீயைப் போல விழிப்பவர்கள். சிகைக் கழுவலத்தார் — கூர்மையான நுனியுள்ள கழு என்னும் ஆயுதவலிமை கொண்டு வந்தவர்களும். மறுத்து எழு — தருமம் முதலிய எல்லாவற்றையும் மறுத்துக் கிளம்பி வந்திருக்கும். மறலிகள் — புதிய யமன்கள். ஒறுத்து — தண்டித்து.]

ஒரு கையில் கழு முதலான ஆயுதங்கள்; ஒரு கையில் யமனுடைய பாசக் கயிறு போன்ற கயிறு. எதற்காக இந்தக் கயிறு? ராவணன் கட்டளையிட்டானல்லவா சம்புமாலியைப் பார்த்து,

தாம்பினில் பற்றித்
தந்(து)என் மனச்சினம்
தணித்தி

[தாம்பினில் — கயிற்றினாலே.]

என்று? அந்தக் கட்டளையை அப்படியே தலைவனுக்கு முன் நிறைவேற்ற வேண்டும் என்று வந்திருக்கும் கூட்டம் இந்தக் கடைசி அணி.

அனுமன் கீழே வைத்திருந்தானே சில நிமிஷங்களுக்கு முன், அந்த எழு என்ற கருவியை மறுபடியும் எடுக்கிறான்; எழுகிறான்.

தன்னோடு வந்தவர்களெல்லாம் கொல்லப்படத் தனித்து நிற்கிறான் சம்புமாலி. 'அப்பா, நீ திரும்பிப் போய் விடு' என்கிறான் அனுமன்.

பகைவனிடம் இரக்கம்தானா? சாமானிய அரக்கர்களிடம் கொள்ளாத இரக்கத்தைச் சம்புமாலியிடம் கொள்வானேன்?

சுந்தர ராமாயணம்



பி.ஸ்ரீ

40. புண் பூத்துத் தருமம் தளிர்த்தது

ஒரு யானைக் காடு. காடே காவலாக வாழ்ந்து கொண்டிருக்கிறது யானைக் கூட்டம். அப்போது எங்கிருந்தோ வந்தது ஒரு சிங்கம். என்ன பசி, — அடடா என்ன கோபம், என்ன கொடுமை! யானைகளைக் கொன்ற வண்ணமா யிருக்கிறது. கடைசியாக ஒரு யானைதான் மிச்சம். அதுதான் தலைமை யானை, யூதபதி — தன் யூதங்களை யெல்லாம் பறிகொடுத்துத் தனியே நின்று கொண்டிருக்கிறது.

இது, தனிப்பட்டுக் கம்பீரமாக நிற்கும் சம்புமாலியின் நிலைமைதான் :

கானே காவல்
வேழக் கணங்கள்
கதவாள் அரிகொன்ற
வானே எய்தத்
தனியே நின்ற
மதமால் வரைஒப்பான்,
தேனே புரைகண்
கனலே சொரியச்
சீற்றஞ் செருக்கினன்,
தானே யானான்
சம்பு மாலி,
காலன் தன்மையான்.

[கானே – காடே. வேழக் கணங்கள் – யானைக் கூட்டங்கள். கத வாள் அரி – (பெரும் பசியால்) கோபமும் கொடுமையும் உடைய சிங்கம். வானே எய்த – இறந்து போக. மதமால்வரை – மதங்கொண்ட மலைபோன்ற யானை. தேனே புரை கண் கனலே சொரிய – தேன் போலச் சிவந்த கண்கள் கோபக் கனல் சொரிய. சீற்றம் செருக்கினன் – மிகுதியாகச் சீறினன். காலன் தன்மையான் – யமன் போன்ற தன்மையுள்ளவன்.]

உதவிக்காக உடன் வந்தவர்களெல்லாம் இப்போது இடையூறாகி விடுகிறார்களாம் இந்த ராட்சஸ காலனுக்கு, பிணமாய் நிணமாய், அந்த இரத்த மாமிசக் கொழுப்புச் சேற்றிலே தேர்ச் சக்கரம் ஆழ்ந்து புதைந்து நிற்கும் நிலையிலே.

அனுமனை நெருங்கி வருவதற்கு வெற்றிடம் கிடைக்கவில்லையாம் இந்த அரக்க வீரனுக்கு. ஐயோ, பாவம்! — கவிஞன் இரங்குகிறான். வானர ஸிம்மமோ இரக்கங் காட்டுவது போலப் பரிகசிக்கப் போகிறது.

வெளியோ இல்லை ;
அளியன் விரைகின்றான்

[வெளி — வெற்றிடம். அளியன் — இரங்கத் தக்கவன்.]
என்பது கவிக் கூற்று.

ரஸமான சம்பாஷணை

அனுமனோ சம்புமாலியை 'எளியன்' என்கிறான், 'வீரம் குறைந்தவன், கோழை' என்ற பொருளிலே.

'ஏதி ஒன்றால் ;
தேரும் அஃதால்;
எளியோர் உயிர்கோடல்
நீதி அன்றால்;
உடன்வந் தோரைக்
காக்கும் நிலையில்லாய்,
சாதி ; அன்றேல்
பிறிதென் செய்தி ?
அவர்பின் தனிநின்றாய் ;
போதி !' என்றான்,
பூத்த மரம்போல்
புண்ணால் பொலிகின்றான்.

[ஏதி ஒன்ருல்-உன் கையில் இப்போதுள்ள ஆயுதம் ஒன்றே. தேரும் அஃதால்-தேரும் அது; அதாவது ஒன்றே. எளியோர் உயிர் கோடல்-வீரத்தில் எளியோராகிய உன்னைப் போன்றவரின் உயிரைக் கொள்ளுதல். சாதி-சாவாய். அன்றேல் பிறிது என் செய்தி – நீ செத்துப் போகாமல் வேறு என்ன தான் செய்யப் போகிருய். போதி-திரும்பிப் போய் விடு.]

பகைவனிடம் உள்ளபடியே கருணை கொண்டு அவனைத் திரும்பிப் போகச் சொல்லுகிருன் அனுமன் எனக் கருதுவது சரியன்று. அனுமனுடைய யதார்த்த மனநிலையைச் சம்புமாலியும் நன்குணர்ந்து கொண்டுதான்,

நன்று, நன்றுன்
கருணை !

என்று ஒரு கோபச் சிரிப்புச் சிரிக்கிருன்.

'சாவாரில் ஒருவன் என்று என்னையும் எளிதாக நினைத்து விட்டாய் போலும், அட குரங்கே!' என்று எவ்வளவு ஆத்திரமாய்ப் போர் தொடங்கி விடுகிருன்!

இதோ பாருங்கள் :

'நன்று நன்றுன்
கருணை!' என்னு
நெருப்பு நகநக்கான்.


'பொன்று வாரின்
ஒருவன் என்ருய்
போலும் எனை' என்னு,

வன்றிண் சிலையின்
வயிரக் காலால்
வடித்திண் சுடர்வாளி

ஒன்று பத்து
நூறு நூறு –
யிரமும் உதைப் பித்தான்.

[என்னு – என்று சொல்லி. நெருப்பு நகநக்கான் – நெருப்புச் சிரிப்பது போலச் சிரித்தவனய். பொன்றுவாரின் – சாவாருள். வல் திண் சிலையின் – மிகவும் வலிய வில்லினது. வயிரக் காலால்-வயிரம் போலே உறுதியான தண்டத்தின் வலிமையால். வடி திண் சுடர் வாளி – காய்ச்சி அடித்துக் கூர்மை செய்த வலிய சுடர் வீசும் அம்புகள். உதைப்பித் தான்– பிரயோகித் தான்.]

இனி, அனும – சம்புமாலி யுத்தம் ஆரம்பிக்க வேண்டியது தானே? ஆனல், போர் வெறி கொண்ட சம்புமாலியுடன் சம்பாஷணையை இன்னும் சற்று நீடிக்க விட்டு ரஸிக்க விரும்புகிறது அனுமனது அநாயாச வீரம்.




'செய்தி, செய்தி,
சிலைக் கொண்டால்,
வெறுங்கை திரிவோரை
நொய்தின் வெல்வ (து)
அரிதோ?' என்று,
முறுவல் உக நக்கான்,
அய்யன் அங்கும்
இங்கும் காலால்
அழியும் மழையென்ன
எய்த எய்த
பகழி யெல்லாம்
எழுவால் அகல்வித்தான்.

[செய்தி செய்தி – செய்வாய், செய்வாய். சிலை–வில். நொய்தின்– எளிதாய். முறுவல் உகநக்கான் – பல் வெளித் தோன்றச் சிரித்தவனாகி. அய்யன் – அனுமன். காலால் – காற்றினால். அழியும் – சிதறிப் போகின்ற. பகழி – அம்புகள். அகல் வித்தான் – அப்பால் விழச் செய்தான்.]

இப்போதும் அனுமன் நிராயுதபாணியாகத்தான் இருக்கிறான்; பக்கத்திலே தான் கிடக்கிறது எழு. 'இதுவும் செய்வாய், இனிமேலும் செய்வாய்!' என்று வெறுங்கையன் மீது அம்பு சொரிந்த வீரத்தைப் பரிகசித்துக் கொண்டே எழுவை மெள்ள எடுத்துக் கொள்கிறான். பிரயோகிக்க அல்ல; இதைக் கொண்டு தற்காப்பு மாத்திரம் செய்து கொண்டு பேச்சை நீடிக்கப் பார்க்கிறான்.

பேச்சும் எழுவும் கழுத்தும்!

சம்புமாலிக்கோ கோபங்கோபமாய் வருகிறது; பேச்சு வரவில்லை. அனுமனுக்கு முன்னும் பின்னுமாகத் தன் அருமையான அம்புகள் முறிந்துவிழுவதைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை. மழுவைப் போன்ற நுனியுள்ள ஓர் அம்பினால் அந்த எழுவை அடித்து முறித்துத் தள்ளுகிறான். அந்தோ! — அது பேராபத்தாகி விடுகிறது. அனுமனுக்கல்ல, சம்புமாலிக்குத்தான்!



தான் எதிர்பாராத நிலையில் கையிலுள்ள எழு பளிச்சென்று அறுத்து வீழ்த்தப்பட்டதும் அனுமனது வயிர உள்ளமும் சலித்துப் போகிறதாம், அந்தக் கணத்திலே. இத்தகைய நிலைமை சாமானியர்களுக்கு ஆபத்துத்தான். ஆனால் அனுமனைப் போன்ற பேராண்

மையாளர்களோ இத்தகைய நெருக்கடி நிலைமையையே தங்கள் வெற்றிக்கு அதி துரித வாய்ப்பாகச் செய்து கொள்வர்!

அத்தகைய வீர வெறியும் வெற்றி - வெறியும் உள்ளத்திலே ஆவேசிக்க, அனுமன் இந்தப் போரை எப்படி ஒரே அடியாக முடித்துக் கொள்கிறான் பாருங்கள்:

சலித்தான் ஐயன் ;
கையால் எய்யும்
சரத்தை உகச்சாடி,
ஒலித்தார் அமரர்
கண்டார் ஆர்ப்பத்
தேரின் உட்புக்குக்
கலித்தான் சிலையைக்
கையால் வாங்கிக்
கழுத்தி னிடையிட்டு
வலித்தான்; பகுவாய்
மடித்து மலைபோல்
தலைமண் ணிடைவிழ.

[சலித்தான்—மனம்சலித்து. சரத்தை -அம்புகளை. கையால் உகச் சாடி - தன் கைகளினாலேயே உதிர்ந்து போகும்படி மோதித் தள்ளி. ஒலி தார் அமரர் - தழைத்த மாலையணிந்த தேவர்கள். கண்டார் ஆர்ப்ப - கண்டு ஆரவாரிக்கும் படி. புக்கு — புகுந்து. கலித்தான் சிலை யை — வீர ஒலி செய்து கொண்டிருந்த சம்புமாலியின் வில்லை. வலித்தான் — இழுத்தான். பகுவாய் — பிளவு பட்ட வாய்.]

ஒரு சண்டையில் எதிரிகள் ஒரு பக்கம் பீரங்கியை வைத்துக் கொண்டு சுட்டு வீழ்த்திக் கொண்டே யிருந்தார்களாம். படையெடுத்து வந்தவனுக்கோ பீரங்கி இல்லை. இவன் தன் பரிவாரத்தினரை நோக்கி, 'இப்படியே போய்ச் சாடி அந்தப் பீரங்கி வண்டியை இங்கு இழுத்து வாருங்கள்' என்று ஆவேசமாய்க் கட்டளை யிட்டான். உடனே வெறி கொண்ட அந்த மற நெஞ்சர்கள் நிரா யுதபாணிகளாக இருந்த போதிலும் எதிரிகள் எதிர்பாராத நிலையில் அங்கே போய் மோதி அந்தப் பீரங்கியையே திருப்பிப் பகைவரைப் புகைத்து விட் டார்களாம். இப்படி வேலை செய்யக் கூடும் அதி மாநுஷ சக்தி, நெருக்கடி யான சந்தர்ப்பங்களிலே.

இந்த ரீதியில் அனுமன் சம்புமாலி யைத் தீர்த்துக் கட்டியதாகக் கூறுவது கவிஞனின் ஆழ்ந்த மனோதத்துவ ஞானத்தையும், பரந்த (அன்றைய) உலக அனுபவத்தையும் காட்டுகிறது. இந்தப் போரை,

குதித்துத் தேரும்
கோல்கொள் ஆளும்
பரியும் குழம்பாக
மிதித்துப் பெயர்த்தும்
நெடுந்தோ ரணத்தை
வீரன் மேற்கொண்டான்.

[கோல் கொள் ஆளும் — கோல் கொண்டு தேர்க் குதிரைகளைச் செலுத் தும் சாரதியும். பரியும் - குதிரைகளும். பெயர்த்தும் — மீண்டும்.]

என்று முடிப்பது எவ்வளவு அதிசயமா யிருக்கிறது!

இந்த நிராயுதபாணி சம்புமாலி தேருக்குள் பாய்ந்து அவன் கையி லுள்ள வில்லையே வாங்கிக் கொண்டு அவன் கழுத்திலே மாட்டி இழுத்துப் போரை முடித்துக் கொண்ட வெற்றிப் பெருமிதத்திலே குதிக்கிறான். குதித்து மிதித்துத் தேரையும் சாரதியையும் பரிகளையும் ஒரே குழம்பாகக் குழப்பி விடுகிறான். மறுபடியும் தோரண வாசல் மீது ஏறிக் கொள்கிறான்.

இச் சந்தர்ப்பத்தில், மறைந்து நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அடிமைத் தேவர்களை ஞாபகப்படுத்திக் கொள்கிறான் கவிஞன்.

அவர்கள் ஓடுகிறார்களாம் ராவணேச் வரனிடம் செய்தி சொல்ல வேணுமே யென்று. இரத்தப் பேராறுகளைக் கட ந்து போகிறார்கள். அந்த ஆறுகள் இழுத் துச் செல்லும் பிணங்களையும் கண்டு போகிறார்கள். கலங்கி நிலை குலைந்து ஊர் அழுகின்ற அழுகையையும் கேட் டுக் கொண்டே போகிறார்கள்.

ஆனால் இதை இப்படிச் சொல்லாமல் கவிக் கூற்று எப்படி வருகிறது பாருங் கள்:

பரிந்து புலம்பும்
மகளிர் காணக்
கணவர் பிணம்பற்றி
விரிந்த குருதிப்
பேரா(று) ஈர்த்து
மனைகள் தொறும்வீச,
'இரிந்த திலங்கை,
எழுந்த தழுகை;
இன்றிங் கிவனாலே
சரிந்த தரக்கர்
வலியென் றெண்ணி
அறமும் தளிர்த்ததால்.

[பரிந்து புலம்பும் மகளிர் — இரங்கிப் புலம்புகின்ற அரக்க மகளிர். குருதி — இரத்தம். ஈர்த்து — இழுத்துக் கொண்டு. இரிந்தது — நிலைகுலைந்ததாகி. சரிந்தது அரக்கர் வலி — ஒழிந்து விட்டது அரக் கர்களின் வலிமை.]